# அழகப்பா அரசு கலைக் கல்லூரி

(முதல் நிலைக் கல்லூரி)
தேசிய தர மதிப்பீட்டுக் குழுவின் "B", NIRF-2024 இல் 76 ஆவது தகுதி பெற்றது
அழகப்பா பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது
**காரைக்குடி - 3**

# ஆண்டு மலர் 2024 - 2025





# அழகப்பா அரசு கலைக் கல்லூரி




முனைவர் **அ. பெத்தாலெட்சுமி** M.Sc., M.Phil., Ph.D.,

முதல்வர்

# அழகப்பா அரசு கலைக் கல்லூரி

(முதல் நிலைக் கல்லூரி)

தேசிய தர மதிப்பீட்டுக் குழுவின் "B", NIRF-2024 இல் 76 ஆவது தகுதி பெற்றது

அழகப்பா பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது

**காரைக்குடி - 3**



# ஆண்டு மலர்

# 2024 - 2025

# ஆண்டு மலருக்குள் அடியெடுத்து வைக்கும் முன்

அன்புடையீர்,

வணக்கம், பத்மபூஷண் டாக்டர் **RM. அழகப்பச் செட்டியார்** அவர்கள் ‘நான் பல ஆண்டுகளாகப் பணத்தைச் சேர்த்திருக்கிறேன். அப்போதெல்லாம் ‘எதற்காகப் பணம் சம்பாதிக்கிறோம். மேலும் மேலும் பணம் வேண்டுமென யாருக்காக உழைக்கிறோம்’ என்பது எனக்குப் புலப்படாமலிருந்தது. ஆனால் காரைக்குடியில் கல்லூரிகளைத் தொடங்கிய நாள் முதல், பணம் சம்பாதித்தே தீர வேண்டும் இல்லாவிட்டால் கல்லூரிகளை முன்னேற்றி நிலை நிறுத்துவது இயலாது என்பது தெளிவானதால் புதிய ஊக்கம் பிறந்தது. இவ்வாறு கல்விக்காகச் செலவழிக்கும் போது நான் அடையும் நிம்மதியை, வேறெப்போதும் அடைந்ததில்லை. இக்கல்லூரிகளை நான் ஆரம்பித்திராவிட்டால் பணத்தை எவ்வாறெல்லாம் செலவு செய்திருப்பேனோ என்று இப்பொழுது எண்ணிப் பயப்படுகிறேன் என்றார்’ அவரின் வெள்ளை உள்ளத்தால் அவரின் நற்பெயரில் அமைந்துள்ள கல்வித் திருக்கோயில் காரைக்குடி, அழகப்பா அரசு கலைக்கல்லூரி. இக்கல்லூரி சிவகங்கை மாவட்டத்தைச் சுற்றியுள்ள கிராமப்புற மாணவர்கள் மற்றும் பல்வேறு மாவட்ட மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்குக் கலங்கரை விளக்கமாய்த் திகழ்கிறது. எண்ணற்ற அறிஞர்களை, பல்துறை வல்லுநர்களை உருவாக்கி வருகின்றது.

இக்கல்லூரியின் 2024-2025 ஆம் கல்வி ஆண்டில் வெளிவரும் ஆண்டு மலர்; ஆண்டறிக்கை, துறை சார்ந்த சிறப்புகள், பேராசிரியர்கள், ஆய்வாளர்கள், மாணவச் செல்வங்களின் ஆக்கங்கள், கவிதைகள், வரைபடங்கள், சாதனைகள் பலவற்றையும் தாங்கி நிற்கின்றது. இவ்விதழ், கல்லூரியில் கிடைத்த அனுபவங்களின் கருத்துக் கருவூலம், காலப்பெட்டகம், மாணவர்கள் தங்கள் கல்லூரிக்கால மலரும் நினைவுகளைத் திரும்பிப் பார்ப்பதற்குதவும் எதிர்கால ஆவணம், இம்மலர்க்கொத்தை உங்கள் கரங்களில் தவழ விடுவதில் பெருமிதம் கொள்கிறோம்.

அன்புடன்,

**பதிப்பாசிரியர் மற்றும் மலர்க் குழுவினர்**

**2024 - 2025** ஆம் கல்வி ஆண்டின் நம் சாதனைகள், நிகழ்வுகள் பற்றிய ஆண்டறிக்கையினைத் தங்கள் முன் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

### 1. முதல்வர்

சேலம் அரசு மகளிர் கலைக்கல்லூரி முதல்வராகப் பணியாற்றிய அ.பெத்தாலெட்சுமி ஆகிய நான் அக்கல்லூரியிலிருந்து இடப்பெயர்வு பெற்று **21.12.2021** முதல் அழகப்பா அரசு கலைக் கல்லூரியில் முதல்வராகப் பணியாற்றி வருகிறேன்.

### 2. தேசிய தரவரிசைப் பட்டியல்

தேசிய நிறுவனத் தரவரிசைக் கட்டமைப்பு **NIRF 2024**இன் படி இந்திய கல்லூரிகளுக்கு இடையிலான தரவரிசைப்பட்டியலில் இக்கல்லூரிக்கு **76**ஆவது இடம் கிடைக்கப்பெற்றுள்ளது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

### 3. ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாப் பணியாளர்கள்

அழகப்பா அரசு கலைக்கல்லூரியில் **62** ஆசிரியர்களும், **13** அண்ணாமலைப் பல்கலைக்கழக மிகை ஆசிரியர்களும், **41** முதலாம் சுழற்சி கௌரவ விரிவுரையாளர்களும், **35** இரண்டாம் சுழற்சி கௌரவ விரிவுரையாளர்களும், **22** பெற்றோர் ஆசிரியர் கழக ஆசிரியர்களும் பணியாற்றி வருகின்றனர். இக்கல்லூரியில் **15** ஆசிரியரல்லாப் பணியாளர்களும், **7** அண்ணாமலைப் பல்கலைக்கழக பணியாளர்களும், **8** பெற்றோர் ஆசிரியர் கழகப் பணியாளர்களும், **4** கணினி அறிவு பயிற்சித் திட்டத்தின் மூலம் நியமிக்கப்பட்ட விரிவுரையாளர்களும், வெளிமுகமை மூலம் **12** பேரும், முன்னாள் மாணவர் சங்கம் மூலம் **2** பேரும் ஆக மொத்தம் **219** பேர் பணியாற்றி வருகின்றனர்.

### 4. மாணவ, மாணவியர்

அழகப்பா அரசு கலைக்கல்லூரியில் இளநிலை மற்றும் முதுநிலைப் பாடப்பிரிவுகளில் **2590** மாணவியர்களும், **1242** மாணவர்களுமாக மொத்தம் **3832** மாணாக்கர்கள் பயின்று வருகின்றனர்.

### 5. கல்லூரி அறக்கட்டளை

அழகப்பா அரசு கலைக்கல்லூரின் முதல்வர் அ. பெத்தாலெட்சுமி அவர்களின் பெற்றோர் திரு. **வயி. அ. அண்ணாமலைச் செட்டியார்** மற்றும் திருமதி **அ. அன்னபூரணி ஆச்சி** நினைவு அறக்கட்டளையானது உயர்கல்வித்துறை அனுமதியுடன் **23.08.2022** அன்று நிறுவப்பெற்று, ரூபாய் இரண்டரை லட்சம் முதலீட்டில் கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து இளநிலை மற்றும் முதுநிலை பயிலும் இயற்பியல் மற்றும் கணினி அறிவியல் துறைகளில் முதல் தரம் பெறும் மாணவர்களுக்குச் சிறப்புப் பரிசு வழங்கப்படுகின்றது.

இக்கல்லூரியில் பேராசிரியர் **AL. மெய்யப்பன்** மற்றும் திருமதி **மெ. சரோஜா** நினைவு அறக்கட்டளையானது உயர்கல்வித்துறை அனுமதியுடன் **13.12.2023** அன்று நிறுவப்பெற்று, ரூ.**5,80,480/-** முதலீட்டில் கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து இளம் அறிவியல் வேதியியல் பட்டப்படிப்பில் பல்கலைக்கழகத் தேர்வுகளில் முதலிடம் பெறும் முதலாமாண்டு, இரண்டாமாண்டு, மூன்றாம் ஆண்டு மாணவர்களுக்குப் பரிசுத்தொகை வழங்குவது எனத் தீர்மானிக்கப்பட்டு வழங்கப்படுகின்றது. மேலும் அறிவியல் துறைகளில் கருத்தரங்கம், பயிற்சிப்பட்டறை, சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துவதற்குச் சுழற்சி முறையில் ஆண்டுதோறும் ரூ.**10,000/-** வழங்குவது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உயர் கல்வித்துறை அனுமதியுடன் நிறுவப்பட்டுள்ள மீனாட்சி பஞ்சநாதம் அறக்கட்டளை சார்பாக ரூ.**5,00,000/-** முதலீடு செய்யப்பட்டு அதன் வட்டித்தொகையில் இருந்து இக்கல்லூரியின் புவியமைப்பியல் துறையில் இளநிலை பயின்று இக்கல்லூரியிலேயே முதுநிலை சேர்ந்த மாணவர்களில் முதல் இடம் பெற்றவருக்கும், முதுநிலை புவியமைப்பியல் பட்டப்படிப்பில் ஆண்டு இறுதியில் முதல் இடம் பெறும் மாணவ, மாணவியருக்கும் பரிசுத் தொகை வழங்கப்படுகிறது.

### 6. முன்னாள் மாணவர்கள் சங்கம் & பெற்றோர் ஆசிரியர் கழகம்

அழகப்பா அரசு கலைக்கல்லூரியில் பழைய மாணவர்கள் சங்கம் **09.05.2022** அன்றும் பெற்றோர் ஆசிரியர் கழகம் **18.02.2023** அன்றும் முறையாக பதிவு செய்யப்பட்டுச் சிறப்புறச் செயல்பட்டு வருகிறது.

### 7. பணி நியமனம், இடப்பெயர்வு மற்றும் பணி நிறைவு

அழகப்பா அரசு கலைக்கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றிய முனைவர் ம. துரை அவர்கள் இரண்டாம் நிலைக் கல்லூரி முதல்வராகப் பதவி உயர்வு பெற்று அறந்தாங்கி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பணியேற்றுள்ளார். தமிழ்த்துறையின் தலைவராகத் தமிழ்த்துறையின் மூத்த பேராசிரியர் முனைவர் மா. சிதம்பரம் பணியேற்றுள்ளார். பொருளியல் துறையின் துறைத் தலைவராக **03.04.2025** முதல் வரலாற்றுத்துறை இணைப்பேராசிரியர் முனைவர் மா. முத்துக்குமார் பொறுப்பேற்றுச் செயல்பட்டு வருகின்றார். புதுக்கோட்டை மன்னர் கல்லூரியில் இருந்து திரு.ப. தினேஷ்குமார் உதவியாளராகப் பதவி உயர்வு பெற்று **13.01.2025** அன்று இக்கல்லூரியில் பணியில் சேர்ந்துள்ளார். இக்கல்லூரியில் பணியாற்றிய அலுவலக உதவியாளர்கள் திருமதி பா. ரேவதி, திருமதி பா. பாக்கியலெட்சுமி இருவரும் இளநிலை உதவியாளர்களாகப் பதவி உயர்வு பெற்று வேறு கல்லூரிகளுக்குச் சென்றுள்ளனர். சிவகங்கை மன்னர் கல்லூரியில் இருந்து இயற்பியல் துறை இணைப்பேராசிரியர் ஆர். சண்முக வடிவு அவர்களும், புதுக்கோட்டை மன்னர் கல்லூரியில் இருந்து தாவரவியல் துறை இணைப்பேராசிரியர் சி. அன்பழகன் அவர்களும், நமது கல்லூரியில் பணியில் சேர்ந்துள்ளனர். **21.12.2021** முதல் அழகப்பா அரசு கலைக் கல்லூரியில் முதல்வராகப் பணியாற்றி வருகின்ற முனைவர் அ. பெத்தாலெட்சுமி ஆகிய நான் இக்கல்வியாண்டுடன் பணிநிறைவு பெறுகின்றேன். மேலும் கணிதவியல் துறைத் தலைவர் முனைவர் அ.பொ. தனபாலன் அவர்களும் வணிகவியல் துறை உதவிப்பேராசிரியர் முனைவர் அ. அப்துல் ரஹீம் அவர்களும் இக்கல்வியாண்டில் பணிநிறைவு பெறுகின்றனர்.

### 8. கல்வி உதவித்தொகை

அழகப்பா அரசு கலைக்கல்லூரியில் பயிலும் **2477 BC / MBC / DNC** மாணவ மாணவியர்களுக்குப் புதிய கல்வி உதவித்தொகை பெற்று வழங்கப்பட்டுள்ளது. புதிய கல்வி உதவித்தொகை பெறுவதற்கு இணையவழிப் பதிவு நடைபெற்று வருகிறது. தமிழ்வழியில் பயிலும் **169** மாணவ, மாணவியர்களுக்கு ரூ.1,52,100/- கல்வி உதவித்தொகை இக்கல்வி ஆண்டில் பெற்று வழங்கப்பட்டுள்ளது. **380 SC/ST** மாணவ, மாணவியர்களுக்கு புதிய கல்வி உதவித்தொகை பெற்று வழங்கப்பட்டுள்ளது.

### 9. நான் முதல்வன் திட்டம்

நான் முதல்வன் திட்டம் **2024-2025** ஆம் கல்வியாண்டு முதல் நமது கல்லூரியில் முதல்வர் துறைத்தலைவர்கள் மற்றும் பேராசிரியர்களின் ஒத்துழைப்போடு சிறப்பாக நடைபெற்று வருகிறது.

நான் முதல்வன் திட்ட ஒருங்கிணைப்பாளராக கணினி அறிவியல் துறை இணைப்பேராசிரியர் முனைவர் சோ. முருகன் அவர்களும் இணை ஒருங்கிணைப்பாளராகக் கணினி அறிவியல் துறை இணைப்பேராசிரியர் முனைவர் **அ. அசோக்குமார்** அவர்களும் செயல்பட்டு வருகின்றனர். **2024-2025** ஆம் கல்வியாண்டில் மாணவர்களுக்கு நேரடியாகவும், ஆன்லைன் மூலமாகவும் வகுப்புகள் நடத்தப்பட்டன. இதில் மூன்றாம் பருவம் மற்றும் ஐந்தாம் பருவத்தில் **2151** மாணவர்களும், இரண்டு, நான்கு மற்றும் ஆறாம் பருவத்தில் **3270** மாணவர்களும் பயன்பெற்றனர். நான் முதல்வன் திட்ட பாட பொறுப்பாளர்களுக்கு ஆசிரியர் திறன் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டத்தின் கீழ் **Faculty Development Program** அழகப்பா பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்டது. இதில் மூன்றாம் பருவம் மற்றும் ஐந்தாம் பருவத்தில் **42** பேராசிரியர்களும், இரண்டு, நான்கு மற்றும் ஆறாம் பருவத்தில் **58** பேராசிரியர்களும் கலந்துகொண்டனர்.

சிகரம் தொடு நிகழ்ச்சியில் கணினி அறிவியல் மற்றும் கணினி பயன்பாட்டியல் சார்பாக **34** மாணவ, மாணவிகள் **Online** வகுப்பில் கலந்து கொண்டு பயன்பெற்றனர். இவர்களுள் கணினி அறிவியல் துறையில் ஐவர், கணினிப் பயன்பாட்டியல் துறையில் ஒருவர், இயற்பியல் துறையில் ஒருவர் என எழுவர் பணி வாய்ப்பினைப் பெற்றுள்ளனர்

என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் நான் முதல்வன் சார்பாக நடத்தப்படும் ஹக்கத்தான் **(Hackathan)** நிகழ்ச்சியில் நமது கல்லூரி மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு பரிசுகளையும் சான்றிதழ்களையும் பெற்றனர்.

நான் முதல்வன் திட்டத்தின் ஒருங்கிணைப்பில் **08.04.2025** அன்று கல்லூரியில் வேலைவாய்ப்பு முகாம் நடைபெற்றது. இம்முகாமில் பதினைந்திற்கும் மேற்பட்ட நிறுவனங்கள் கலந்து கொண்டு தங்கள் நிறுவனங்களுக்குத் தேவையான பணியாட்களைத் தேர்வு செய்தனர்.

### 10. புதுமைப்பெண் திட்டம் மற்றும் தமிழ்ப்புதல்வன் திட்டம்

அழகப்பா அரசு கலைக்கல்லூரியில் தமிழ்நாடு அரசின் புதுமைப்பெண் திட்டத்தின் கீழ் **1054** மாணவிகள்பயனடைந்துள்ளனர். தமிழ்ப்புதல்வன் திட்டத்தின் கீழ் **485** மாணவர்கள் பயன்பெற்றுள்ளனர்.

### 11. மேனாள் மாணவர்களின் பங்களிப்பு

இக்கல்லூரியில் பயின்ற மேனாள் மாணவர்கள் தாங்கள் பயின்ற கல்லூரிக்கு நன்றி பாராட்டும் வகையில் தங்களால் இயன்ற உதவிகளை ஆண்டுதோறும் செய்து வருகின்றனர்.

இக்கல்லூரியில் **1981 - 84** ஆம் கல்வியாண்டில் இயற்பியல் துறையில் பயின்ற மாணவர்கள் சார்பாக மாணவர் கூட்டுறவு அங்காடிக்கு ரூ.**2,50,000/-** மதிப்பீட்டில் நகலெடுக்கும் இயந்திரம் வாங்கி வழங்கப்பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட மாணவர்களால் இயற்பியல் துறைக்கு முன்பாகத் தரைத்தளமும் தோட்டமும் ரூ.**70,000/-** மதிப்பீட்டில் செய்து தரப்பட்டுள்ளது. சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை வழங்கும் இயந்திரம் ரூ.**2,00,000/-** மதிப்பீட்டில் **1981 - 84** ஆம் கல்வியாண்டில் இயற்பியல் துறையில் பயின்ற மாணவர்கள் சார்பாக வழங்கப்பட்டுள்ளது. **1992 - 95**ஆம் கல்வியாண்டில் இயற்பியல் துறையில் பயின்ற மாணவர்கள் சார்பாக ரூ.**1,50,000/-** மதிப்பீட்டில் **SMART BOARD** வாங்கி வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்த்துறை இணைப்பேராசிரியர் முனைவர் ப.சு.செல்வமீனா அவர்களின் முனைவர் பட்ட ஆய்வு மாணவர் முனைவர் பெ. அசோக்குமார் அவர்கள் தமிழ்த்துறைக்கு **50** நெகிழி இருக்கைகளை வாங்கி வழங்கியுள்ளார். தமிழ்த்துறையில் **2005 - 2008** ஆம் கல்வியாண்டு வரை பயின்ற மாணவர்கள் **3** மேசைகளை வாங்கித் தமிழ்த்துறைக்கு வழங்கியுள்ளனர். **2002 - 2005** ஆம் கல்வியாண்டில் ஆங்கிலத் துறையில் பயின்ற மாணவர்களால் ஆங்கிலத் துறைக்கு **UPS** மற்றும் **INVERTER** வாங்கி வழங்கப்பட்டுள்ளது. நமது கல்லூரிக்குப் பல்லாற்றானும் உதவி வருகின்ற மேனாள் மாணவர்களுக்கும் முன்னெடுக்கும் துறைத்தலைவர்கள் மற்றும் பேராசிரியர்களுக்கும் எனது வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

### 12. கல்லூரி சாலை அமைப்பு

காரைக்குடி அரசு வழக்குரைஞர் திரு. பாலசுப்பிரமணியன் அவர்களின் வாழ்க்கைத் துணைநலம், சிவகங்கை மாவட்ட மன்ற உறுப்பினர் **(COUNCILLOR)** திருமதி இராதா பாலசுப்பிரமணியன் அவர்களின் சீரிய முயற்சியில் **24.56** இலட்சம் மதிப்பீட்டில் நமது கல்லூரியின் முதல் நுழைவு வாயிலிலிருந்து இரண்டாம் நுழைவு வாயில் வரை பேவர் பிளாக் சாலை அமைக்கப்பட்டது. இப்பணியைத் திறம்படச் செய்து தந்த அம்மையார் திருமதி இராதா பாலசுப்பிரமணியன் அவர்களுக்கும் இப்பணியை விரைந்து முடிக்க உறுதுணையாக இருந்த அரசு வழக்குரைஞர் திரு. பாலசுப்பிரமணியன் அவர்களுக்கும், முன்னெடுத்த நமது கல்லூரியின் புவியமைப்பியல் துறைத் தலைவர் முனைவர் ப. உதயகணேசன் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

### 13. பிற நிதி ஒதுக்கீடு

நமது கல்லூரியின் புவியமைப்பியல் இணைப்பேராசிரியர் முனைவர் ப. உதயகணேசன் அவர்களின் ஆய்வு மேற்பார்வையின் கீழ் வங்காள விரிகுடா ஆழ் கடல் மண் மாதிரிகளைக்கொண்டு, கரிமப் பகுப்பாய்வு மூலம் காலத்தைக் கணக்கிட்டுத் தொன்மைக்கால பருவநிலை மாறுபாடுகள் குறித்த முனைவர் பட்ட ஆய்வை மேற்கொள்ள ஓர் ஆய்வு மாணவருக்கு மாதாந்திர ஆய்வு உதவித் தொகையாக ரூ.**14,000/-** வீதம் **3** வருடங்களுக்கும் ஆராய்ச்சி நிதியுதவியாக ஆண்டுக்கு ரூ.**25,000/-** மும் ரூ.**5,00,000/-** த்திற்கு மிகாமல் **10** ஆழ்கடல் மண் மாதிரிகளைக் கரிமப்

பகுப்பாய்வு செய்துகொள்ளவும் புதுதில்லியிலுள்ள பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான முடுக்கி மையம் **(Inter University Accelerator Centre, New Delhi)** நிதியுதவி அளித்துள்ளது.

**14. கல்விசாராத்திறன் மையம் (ADD ON COURSE)**

கல்விசாராத்திறன் மையத்தின் சார்பாக **64** மாணவிகளுக்கு ஆரி **(AARI WORK)** பயிற்சியும், **17** மாணவிகளுக்கு அழகுக்கலைப் பயிற்சியும் வழங்கப்பட்டன. மேலும் மாணவர்களின் ஆங்கில பேச்சாற்றலையும் ஆளுமைத்திறனையும் வளர்த்தெடுக்கும் பயிற்சி **32** மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.

**15. பயிற்சிப் பட்டறை**

பேராசிரியர் ஏ.எல். மெய்யப்பன் மற்றும் எம். சரோஜா நினைவு அறக்கட்டளையின் சார்பாக **"பெருநிறுவன, தனியார் மற்றும் அரசு சாரா நிறுவனங்களில் புவி அமைப்பியல் பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்பு"** என்னும் பொருண்மையில் **19.03.2025** அன்று பணிவாய்ப்புப் பயிற்சிப் பட்டறை புவியமைப்பியல் துறையில் நடைபெற்றது.

**16. நிதி ஒதுக்கீடு**

தமிழக அரசின் சிறப்புத் திட்டப் பயன்கள் நிதி ஒதுக்கீட்டில் இயந்திரம் மற்றும் சாதனங்கள் பராமரிப்புக்காக ரூ.**20,000/-**மும், ஆய்வக உபகரணங்களுக்காக ரூ.**2,00,000/-**மும், எந்திர உபகரணங்களுக்காக ரூ.**1,50,000/-**மும், புத்தகங்கள் வாங்குவதற்கு ரூ.**3,80,000/-**மும் நம் கல்லூரிக்குக் கிடைக்கப்பெற்றன. பொதுப்பணித்துறையின் சார்பாக நம் கல்லூரியின் கட்டிடப் பராமரிப்புக்காக ரூ.**13,00,000/-**மும், மின் சாதனப் பராமரிப்புக்காக ரூ.**4,00,000/-**மும் தமிழக அரசினால் இக்கல்லூரிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுப் பொதுப்பணித்துறையால் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**17. ஐம்பெரும் விழா**

அழகப்பா அரசுகலைக் கல்லூரியில் **02.04.2025** அன்று விளையாட்டு விழாவும், **03.04.2025** அன்று முத்தமிழ் விழாவும் **04.04.2025** அன்று நுண்கலை மன்ற விழாவும் **05.04.2025** அன்று கல்லூரிப் பட்டமளிப்பு விழாவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டன. கல்லூரியின் ஆண்டு விழா **07.04.2025** அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது.

**18. கலைஞர் தமிழ் மன்ற விழா**

தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித் துறையால் கலைஞர் மாணவர் தமிழ் மன்றம் கல்லூரியில் தொடங்கப்பட்டது. தமிழக அரசால் வழங்கப்பட்ட ரூ.**5,00,000/-** வைப்புத் தொகையாக வங்கியில் செலுத்தப்பட்டு அதன் மூலம் பெற்ற வட்டி ரூ.**31,768/-**ஐ கொண்டு கல்லூரி மாணவர்களுக்குக் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடத்தப்பட்டு ஒவ்வொரு போட்டியிலும் மூன்றிடங்களைப் பெற்ற மாணவர்களுக்கு **03.04.2025** பிற்பகல் உமையாள் கலையரங்கில் நடைபெற்ற கலைஞர் மாணவர் தமிழ் மன்ற விழாவில் பரிசுத்தொகையும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பட்டன. காரைக்குடி இராமசாமி தமிழ் கல்லூரி முதல்வர் முனைவர் செ. நாகநாதன் சிறப்பு விருந்தினராகப் பங்குபெற்றார். கலைஞர் மாணவர் தமிழ் மன்ற ஒருங்கிணைப்பாளரும் தமிழ்த்துறைத் தலைவருமாகிய முனைவர் மா. சிதம்பரம் அவர்களும் தமிழ்த்துறைப் பேராசிரியர்களும் விழா ஏற்பாடுகளைச் சிறப்பாகச் செய்திருந்தனர்.

**19. நன்றியுரை**

இக்கல்லூரியின் வளர்ச்சிக்கு உறுதுணை புரிந்துவரும் தமிழக அரசுக்கும், பல்கலைக்கழக நிதி நல்கைக்குழுவிற்கும் மதிப்பிற்குரிய பாராளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர் ஆகியோருக்கும், கல்லூரி உள்கட்டமைப்பு வசதி தொடர்பான பணிகளைச் செய்து வரும் பொதுப்பணித்துறையினருக்கும் நகரின் முக்கிய பிரமுகர்களுக்கும் கல்லூரி நிர்வாகத்தின் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இக்கல்லூரியின் பெருமையையும் பாரம்பரியத்தையும் பாதுகாக்கத் தொடர்ந்து பாடுபட்டுவரும் பேராசிரியர்களுக்கும், ஆசிரியரல்லாப் பணியாளர்களுக்கும் ஆய்வக உதவியாளர்களுக்கும், அலுவலர்களுக்கும் மாணவ, மாணவியருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி!!!

அழகப்பா அரசு கலைக்கல்லூரி தமிழ் உயராய்வு மையத்தில் இளங்கலை மற்றும் முதுகலைத் தமிழ் மன்றத் தொடக்க விழா 16.10.2024 அன்று கல்லூரி உமையாள் கலையரங்கத்தில் நடைபெற்றது. இவ்விழாவிற்கு கல்லூரி முதல்வர் முனைவர் அ. பெத்தாலெட்சுமி அவர்கள் தலைமையேற்று விழாவினைத் தொடங்கி வைத்தார். தமிழ்த்துறைத் தலைவர், இணைப்பேராசிரியர் முனைவர் மா. சிதம்பரம் அவர்கள் முன்னிலை வகித்தார். சிறப்பு விருந்தினராக முனைவர் மு.க. கண்மணி இணைப்பேராசிரியர் (ஸ்ரீ சேவுகன் அண்ணாமலைக்கல்லூரி, தேவகோட்டை) 'வாசிப்பை நேசிப்போம்' என்னும் பொருண்மையில் சிறப்புரை ஆற்றினார். இவ்விழாவில் முதுகலை மன்றப் பொறுப்பாசிரியர் முனைவர் து. இரவிக்குமார் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். இளங்கலை மன்றப் பொறுப்பாசிரியர் முனைவர் ரெ. முத்துராஜன் அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

இளங்கலை மற்றும் முதுகலைத் தமிழ் மன்ற நிறைவு விழா 20.03.2025 அன்று தமிழ்த்துறை உயராய்வு மையத்தில் நடைபெற்றது. இவ்விழாவிற்குக் கல்லூரி முதல்வர் முனைவர் அ. பெத்தாலெட்சுமி அவர்கள் தலைமையேற்று விழாவினைத் தொடங்கி வைத்தார். தமிழ்த்துறைத் தலைவர், இணைப்பேராசிரியர் முனைவர் மா. சிதம்பரம் அவர்கள் முன்னிலை வகித்து அறிமுக உரையும் வழங்கினார். சிறப்பு விருந்தினராக முனைவர் இரா. கீதா (உதவிப் பேராசிரியர் இராமசாமி தமிழ்க்கல்லூரி, காரைக்குடி) 'இலக்கிய இன்பம்' என்னும் பொருண்மையில் சிறப்புரை ஆற்றினார். இவ்விழாவில் இளங்கலை மன்றப் பொறுப்பாசிரியர் முனைவர் ரெ. முத்துராஜன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். முதுகலை மன்றப் பொறுப்பாசிரியர் முனைவர் து. இரவிக்குமார் அவர்கள் நன்றியுரை வழங்கினார். மன்ற விழாவிற்குரிய நிகழ்வுகளைத் தமிழ்த்துறைத் தலைவர் உள்ளிட்ட பேராசிரியப் பெருமக்கள், முனைவர் பட்ட ஆய்வாளர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் மேற்கொண்டு விழாவினைச் சிறப்படையச் செய்தனர்.

தமிழ்த்துறை சார்பாக முத்தமிழ் விழா 03.04.2025 அன்று உமையாள் கலையரங்கத்தில் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் இயற்றமிழுரையாக 'என்றுமுள தென்தமிழ்' என்னும் பொருண்மையில் சிவகங்கை அரசு மகளிர் கலைக்கல்லூரி பேராசிரியை கலைமணி முனைவர் இர. ஹேமமாலினி அவர்கள் உரை நிகழ்த்தினார். இசைத்தமிழுக்காகத் திருவையாறு, தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரியைச் சேர்ந்த, இசையருவி செல்வி சி.பி. பைரவி அவர்கள், 'பண்ணும் பாட்டும்' என்னும் பொருண்மையில் இசைப்பேருரை நிகழ்த்தினார். நடன, நாடகத் தமிழுக்காக அழகப்பா அரசு கலைக்கல்லூரியைச் சார்ந்த செல்வி ம. ரச்சனா, செல்வி இரா. நந்தினி, செல்வி ஆ. சௌந்தர்யா, செல்வி ப. பொன்னழகு குழுவினர் மேடை நாடகம் நிகழ்த்தினர். அரங்கம் இயற்றமிழால் இசைத்தமிழால் நாடகத்தமிழால் பொலிவுற்று விளங்கியது.

**வள்ளல் அழகப்பர் ஆய்வு மன்றம்**

வள்ளல் அழகப்பர் ஆய்வு மன்றத் தொடக்க விழா 24.10.2024 அன்று நடைபெற்றது. இவ்விழாவில் தமிழ்த்துறைத் தலைவர் (பொ) இணைப்பேராசிரியர், முனைவர் மா. சிதம்பரம் அவர்கள் முன்னிலை உரையாற்றினார். அழகப்பா அரசு கலைக்கல்லூரி முதல்வர் முனைவர் அ. பெத்தாலெட்சுமி அவர்கள் தலைமை தாங்கிச் சிறப்புச் செய்தார். இந்நிகழ்வில் அழகப்பா பல்கலைக்கழகத் தமிழ்ப் பண்பாட்டு மைய இயக்குநர் பேராசிரியர் முனைவர் சே. செந்தமிழ்ப்பாவை அவர்கள் சிறப்பு விருந்தினராகப் பங்குபெற்று **'ஆய்தல் அறிவு'** என்னும் பொருண்மையில் சிறப்புரை நிகழ்த்தினார்.

04.02.2025 அன்று நடைபெற்ற கருத்தரங்கில் பல்வேறு தலைப்புகளில் முனைவர் பட்ட மாணவர்கள் அறுவர் கட்டுரை வழங்கினர். இந்நிகழ்விற்கு அமர்வுத் தலைவர்களாக முனைவர் மா. சிதம்பரம், முனைவர் இரா. குமார், முனைவர் க. அமுதா, ஆகியோர் பங்கேற்று நடத்தித் தந்தனர். மாணவர்களின் கட்டுரை மீதான கலந்துரையாடல் வினா, விடையாகச் சிறப்புற அமைந்தது.

வள்ளல் அழகப்பர் ஆய்வு மன்ற நிறைவு விழா 01.04.2025 அன்று தமிழ் உயராய்வு மையத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் தமிழ்த்துறைத் தலைவர் இணைப்பேராசிரியர், முனைவர் மா. சிதம்பரம் அவர்கள் முன்னிலை உரையாற்றினார். அழகப்பா அரசு கலைக்கல்லூரி முதல்வர் முனைவர் அ. பெத்தாலெட்சுமி அவர்கள் தலைமை தாங்கிச் சிறப்புச் செய்தார். இந்நிகழ்வில் அழகப்பா அரசு கலைக்கல்லூரி இயற்பியல் துறை, தேர்வுநிலை ஆய்வக உதவியாளர் முனைவர் க. மோகன் அவர்கள் சிறப்பு விருந்தினராகப் பங்குபெற்று, 'ஆய்வு முடிவல்ல' என்னும் பொருண்மையில் சிறப்புரை நிகழ்த்தினார். இவ்விரு நிகழ்ச்சிகளிலும் ஒருங்கிணைப்பாளராக முனைவர் மு. மரகதவல்லி அவர்களும், ஆய்வு மன்ற உறுப்பினர்களாக முனைவர் சு. கார்த்திகேயன் முனைவர் ரெ. முத்துராஜன் அவர்களும் இருந்து செயல்பட்டனர்.

## Annual Report (2024 -2025)

Department of English conducted students Alumna Interaction meet on 23.8.2024. Mrs. Meera Prakash, the Alumnus from U.K enriched the students with her academic experiences. NET / SET Awareness Programme was conducted on1-10-2024. Mrs.V. Packialakshmi, Asst. Professor from Department of English, G.T.N College of Arts & Science motivated our students on how to crack NET / SET Examinations. A Special Lecture on Memory Techniques was given by Memory Coach Mrs. N. Kanimozhi on 25.10.2024.

### Students Achievements :

P. NeethiRani II M.A. English, won the First Prize in the Mime Competition (District Level) conducted by JCI on 16.08.2024 at Sivagangai. S. Annapoorani II B.A. English won the First Prize in the short story writing competition (District Level) conducted by Sree Sevugan Annamalai, Devakottai on 27th December 2024.

### Ph.D Awarded :

| S.No. | Name of Candidate | Topic | Name of Supervisor | Date |
|---|---|---|---|---|
| 1. | I. Gayathri | T.C Boyle's Select Novels - An Ecocentric and Anthropological Study | Dr.V.R. Jayasala | 10.02.2025 |
| 2. | V. Karunya Sundari | Ecological Imperialism and Interdependence: An Ecocritical Reading of Select works of Linda Hogan and Barbara Kingsolver. | Dr.N. Kavitha | 30.08.2024 |

### University Rank Holders :

R. Boomika secured 4th Rank in B.A. English

V. Sowmiya Meena secured 10th Rank in B.A. English

M. Suriya Priya secured 7th Rank in M.A. English






K. Deepa
B.Com I-A





Harini Murugadass
B.Sc., (CS) III-A






K. Deepika
B.Com I-A

2024 - 2025 ஆம் கல்வி ஆண்டில் வரலாற்று மன்றத் துவக்க விழா 15.10.2024 அன்று நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக புதுக்கோட்டை மாமன்னர் கல்லூரியின் வரலாற்றுத் துறை உதவிப் பேராசிரியர் **M. ஜாகிர் உசேன்** என்பவர் கலந்து கொண்டார்.

தொல்லியல் கள ஆய்வு தொடர்பாக 27.12.2024 அன்று கீழடி, திருமலை மற்றும் காளையார் கோவில் போன்ற இடங்களுக்கு முதுகலை மற்றும் இளங்கலை மூன்றாமாண்டு மாணவர்கள் சென்று பார்வையிட்டனர். இதில் துறைத்தலைவர் மற்றும் பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.

கல்விச் சுற்றுலா தொடர்பாக 11.03.2025 மற்றும் 12.03.2025 இரண்டு நாட்கள் இளங்கலை மூன்றாமாண்டு மாணவர்கள் மற்றும் துறைப் பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.

**துறை பேராசிரியர்கள் பங்கேற்பு விவரம் :**

1. மதுரை – காமராசர் பல்கலைக் கழகத்தில் 'நான் முதல்வன்' தொடர்பாக நடைபெற்ற FDP இல் இணைப் பேராசிரியர் முனைவர் ம. முத்துக்குமார் 18.12.2024 முதல் 24.12.2024 வரை கலந்து கொண்டார்.
2. காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற நான் முதல்வன் FDPல் உதவிப் பேராசிரியர் முனைவர் வேலாயுதராஜா கலந்து கொண்டார்.
3. South Indian History Congress கோழிக்கோடில் நவம்பர் 2024ல் நடைபெற்றதில் உதவிப் பேராசிரியர் முனைவர் சு. சரவணன் கலந்து கொண்டார்.

   2024 டிசம்பர் மாதம் நடைபெற்ற Indian History Congress மாநாட்டில் உதவிப் பேராசிரியர் முனைவர் சு. சரவணன் கலந்து கொண்டார்.

காரைக்குடி கவனகக் கலை மன்றத்தின் சார்பாக வரலாற்றுத்துறை பேராசிரியர் முனைவர் ப. வேலாயுத ராஜாவிற்கு 'கல்விச்சுடர் விருது' வழங்கப்பட்டது.

முனைவர் ஜோ. மார்ட்டின் ஜெயப்பிரகாஷ் 'தமிழ்நாட்டில் சமணத்தின் எழுச்சியும் வீழ்ச்சியும்' என்னும் பொருளிலான நூல் பகுப்பினைச் சங்க காலத் தமிழ்ப் பண்பாட்டு வரலாறு என்னும் பொருண்மையிலான நூல் பகுதியில் வெளியிட்டுள்ளார்.

## தாய் தமிழே!





பாரதியாரைப் பாராட்ட வைத்தவள்
பாரதிதாசனைப் பக்குவப்படுத்தியவள்
கண்ணதாசனின் வரிகளைக் கௌரவப்படுத்தியவள்!
கம்பனை இனிமையாக்கியவள்!
காளமேகப் புலவரின் வரிகளைக் காலம் கடந்து பேச வைத்தவள்
உ.வே. சாமிநாதரை உயர்த்தியவள்
திருவள்ளுவரை உலகெங்கும் போற்ற வைத்தவள்!
தமிழ்த் தென்றல் திரு.வி.க வை வீரமாக்கியவள்
என் தாய்த் தமிழ்

**அ. காளிமுத்து**
விலங்கியல் துறை முதலாம் ஆண்டு

## தாய்மை



கருவறையில்,
காற்று தந்தாய்...
பாசத்தினை,
கற்றுத்தந்தாய்...
அன்பைப் பொழிவதில்,
வற்றாத ஊற்றானாய்!
அனுதினமும்.,
நான் சுவாசிக்கும் காற்றானாய்!
உன் உதிரத்தினைப் பாலாக்கினாய்
என் சரீரத்தினைப் பலமாக்கினாய்...!
பத்து திங்கள் எனைச் சுமந்து...
பத்தியம் பல இருந்து...
பெற்றாள் என்னை...!
அவளே,
என் அன்னை!!!



**ப. இலக்கியா**
இளநிலை மூன்றாமாண்டு, கணினி அறிவியல் துறை

ஒவ்வொரு வருடமும் இந்தித் துறையில் இந்திப் பாடத்தில் முதல் இரண்டு இடங்களைப் பெற்றவர்களுக்குப் பரிசு வழங்கி சிறப்பிப்பது வழக்கம்.

அதன் அடிப்படையில் இந்த 2024 - 2025 ஆம் கல்வியாண்டின் முதலாம் ஆண்டு மாணவ, மாணவியரில் முதல், இரண்டு இடத்தைப் பெற்ற மாணவ/மாணவியரின் விபரம்

| எண் | பெயர் | பாடப்பிரிவு | பெற்ற இடம் |
|---|---|---|---|
| 1. | R. ஜெயஸ்ரீ கோமதி | தொழில் நிர்வாகவியல் | முதல் பரிசு |
| 2. | B. ஸ்ரீநிதி | வணிகவியல் | இரண்டாம் பரிசு |

2024 - 2025 ஆம் கல்வியாண்டின் இரண்டாம் ஆண்டு மாணவ, மாணவியரில் முதல் இரண்டு இடத்தைப் பெற்ற மாணவ/மாணவியரின் விபரம்

| எண் | பெயர் | பாடப்பிரிவு | பெற்ற இடம் |
|---|---|---|---|
| 1. | V. நித்திய ஸ்ரீ | கணினி அறிவியல் | முதல் பரிசு |
| 2. | சந்தியா சரவணன் | வணிகவியல் | இரண்டாம் பரிசு |

## A Walk Through Memory

**- V. Vedhika,**
B.A. English - II

*With travelling hands, I bring these blooms,*
*A humble tribute, avoid the tombs.*
*Soft pedals fall where you now lie,*
*Beneath the endless, quiet sky.*

*The earth that holds you, still and deep,*
*Murnurs Secrets that time must keep.*
*In silence, I kneel and bow my head,*
*grieving the words that I never said*

*The flowers, though bright, cannot replace*
*The warmth you gave, your loving grace*
*But in this bouquet, my heart does send*
*A love that will not break or bend.*

*The wind will carry my silent prayer*
*That somehow, you can still be there..*
*In the rustling leaves, in the evening's glow,*
*In every Place where memories flow.*

*Rest now, my dear in peaceful sleep,*
*Where angels guard and shadows keep*
*I leave these blooms in gentle care,*
*For though you're gone, I know you're there*





**M. Priyanka**
B.Sc (CS) - II-A





**பா. அர்ச்சனா தேவி**
கணினி பயன்பாட்டியல் துறை

# பொருளியல் துறை

1. 21.10.2024 அன்று பொருளியல் துறை மன்ற விழா நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக அழகப்பா பல்கலைக்கழகப் பொருளியல் துறைத் தலைவர் முனைவர் சுரேஸ் அவர்கள் கலந்து கொண்டு மாணவர்கள் மத்தியில் வேலைவாய்ப்பில் பொருளாதார படிப்பின் முக்கியத்துவம் பற்றி உரையாடினார்.

2. திரு.எல். பிரவீண்குமார் இளங்கலை முதலாமாண்டு பொருளியல் மாணவர் தமிழ்நாடு கிரிக்கெட் அணி COTLS –க்காக ஹைதராபாத்தில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் பங்கேற்று நமது கல்லூரிக்கும், துறைக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

3. முதலாமாண்டு இளங்கலை பொருளியல் மாணவர் எம். மாதேஷ் என்பவர் தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பைக்கான 21.10.2024 அன்று (CM TROPHY) மாநில அளவிலான நடைபெற்ற நீச்சல் போட்டியில் பங்கேற்று முதலிடம் பிடித்துத் தங்கப் பதக்கம் வென்று நமது கல்லூரிக்கும், துறைக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

4. முதலாமாண்டு இளங்கலை பொருளியல் மாணவர் ஜெயப்பிரகாஷ் என்பவர் தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பைக்கான மாநில அளவில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் பங்கு பெற்றார்.

5. அழகப்பா பல்கலைக்கழகக் கல்லூரிகளுக்கிடையேயான நடைபெற்ற பேட்மிட்டன் போட்டியில் கல்லூரி சார்பாக எமது துறை மாணவர்கள் கதிர்வேல் (இரண்டாம் ஆண்டு பொருளியல்), பிரியதர்ஷன் (இரண்டாம் ஆண்டு பொருளியல்), சந்தோஷ்குமார் (இரண்டாம் ஆண்டு பொருளியல்) ஆகியோர் பங்குபெற்று இரண்டாம் பரிசினைப் பெற்றனர்.

6. எமது துறையைச் சார்ந்த மாணவி ஜெனனி அழகப்பா பல்கலைக்கழகக் கல்லூரிகளுக்கிடையேயான நடைபெற்ற கபடி போட்டியில் கல்லூரி சார்பாகப் பங்குபெற்று மூன்றாம் பரிசினைப் பெற்றனர்.

7. 11.01.2025 அன்று துறை சார்பாக பொங்கல் விழா நடைபெற்று அதன் தொடர்ச்சியாக விளையாட்டு போட்டிகள் நடத்தப்பெற்று வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

8. மூன்றாம் ஆண்டு மாணவி எஸ். அபிநயா என்பவர் அழகப்பா பல்கலைக்கழகக் கல்லூரிகளுக்கிடையேயான சதுரங்கப் போட்டியில் தனிநபர் பிரிவில் முதல் பரிசினைப் பெற்றுக் கல்லூரிக்கும், துறைக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

9. அழகப்பா பல்கலைக்கழகக் கல்லூரிகளுக்கிடையேயான கபடிப் போட்டியில் எமது துறை மாணவர்கள் அஸ்வா (மூன்றாமாண்டு பொருளியல்) முத்துராஜ பாண்டியன் (மூன்றாமாண்டு பொருளியல்) முத்துபாண்டி (மூன்றாமாண்டு பொருளியல்) ஆகியோர் கல்லூரி சார்பாகப் பங்குபெற்று இரண்டாம் பரிசினைப் பெற்றனர்

## நட்பு



தன் நண்பனுக்காக
உயிரையே விட்டதாம்
**தீக்குச்சி!**

அதை நினைத்து,
நினைத்து உருகியதாம்
**மெழுகுவர்த்தி!**





**கு. கலைஞானம்**
வணிகவியல் துறை



**S. Dhanalakshmi**
B.Com I -A

விண்ணாளும்
அரசன் இந்த
மண்ணாளும்
பூமாதேவிக்கு
அளிக்கும் பரிசு
மாலையோ
இந்த **மழை?**







**G. Bhuvaneshwari**
B.Com II-IA

அழகப்பா அரசு கலைக் கல்லூரியின் 2024-2025ஆம் கல்வியாண்டில்

- வணிகவியல் மன்றத் துவக்க விழாக் கூட்டமானது 12.08.2024 அன்று காலை 10.00 மணியளவில், வணிகவியல் துறையில் சிறப்பாக நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக WPC நிறுவனர் திரு. பழனியப்பன் Tally மற்றும் SPSS மென்பொருள் குறித்துச் சிறப்புரையாற்றினார்.

- 19.12.2024 அன்று பணப்பட்டுவாடா மற்றும் தீர்வு அமைப்புகள் துறை சார்பில் டிஜிட்டல் வங்கியியல் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் மேலாளர் பிரவீன் மற்றும் சென்னை, பணப்பட்டுவாடா மற்றும் தீர்வு அமைப்புகள் துறை அதிகாரிகளான ஹஷிதா, ராமகிருஷ்ணன், விக்னேஸ்வரன் ஆகியோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மாணவ மாணவிகளிடையே டிஜிட்டல் வங்கியைப் பற்றியும், டிஜிட்டல் வங்கி ஏன் அவசியம் என்பதைப் பற்றியும் விரிவாக எடுத்துரைத்தனர். மேலும், டிஜிட்டல் வங்கியில் பாதுகாப்பான வழிகள் என்ன என்பதைப் பற்றியும், கட்டண முறையிலான மோசடிகள் குறித்தும், அவை எவ்வாறு களையப்பட வேண்டும் என்பது குறித்தும் விளக்கிப் பேசினர். மேலும் இணையம் மற்றும் கைபேசி வங்கியியல் மூலம் வழங்கப்படும் சேவைகள் குறித்தும் சிறப்புரையாற்றினர். இதில் பேராசிரியர்களும், மாணவ, மாணவிகளும் கலந்து கொண்டனர். மேலும், இந்நிகழ்ச்சி சார்ந்து வினாடி வினாக் கேள்விகள் கேட்கப்பட்டு, சரியான பதில் அளித்த 13 மாணவ, மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

- 07.01.2025 முதல் 22.01.2025 வரை **"தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பிரிவு"** சார்பாக குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் (Micro, Small and Medium Enterprises) அமைப்பதற்கும், தொழில் முனைவோர்க்குத் தேவையான வழிமுறைகளையும் மற்றும் முதலீட்டுக்கான கடன் சலுகைகள் பெறும் வழிமுறைகளையும் வணிகவியல் துறைத்தலைவர் முனைவர் S. லதா மற்றும் வணிகவியல் துறை பேராசிரியர் முனைவர் A. இரமேஷ் அவர்களால் அனைத்து இளங்கலை மூன்றாம் ஆண்டு 938 மாணவ, மாணவிகளுக்கும் தெளிவான விளக்கப் பயிற்சி அளிக்கப்பட்டது.

- 12.01.2025 அன்று வணிகவியல் துறை, மன்றம் சார்பாகவணிகவியல் துறை மாணவ – மாணவிகளுக்குப் பல்வேறு திறன் சார்ந்த போட்டிகள் நடத்தப்பட்டு, வணிகவியல் துறைத்தலைவர் மற்றும் பேராசிரியர்கள் முன்னிலையில் பரிசுகள் வழங்கப்பட்டன.

- 01.02.2025 அன்று வணிகவியல் துறைத்தலைவர் முனைவர் S. லதா 2025 - 2026 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு பட்ஜெட் குறித்த விவாதமும் வணிகத் தலைவர்கள் மற்றும் தொழில்துறை பங்குதாரர்கள், மத்தியில், மாநில பட்ஜெட் வணிகம் மற்றும் தொழில்த்துறை வளர்ச்சிக்கு ஆதரவாக உள்ளதா? என்பது குறித்து விரிவான விளக்கம் வணிகவியல் துறை மாணவ – மாணவிகளுக்கு வழங்கினார்.

- 14.02.2025 அன்று வணிகவியல் துறைத்தலைவர் முனைவர் S. லதா தலைமையில் ij Academy சார்பாக TNPSC Group I, II, IV & மற்றும் TNSURB (Police SI & PC Exam) போன்ற போட்டி தேர்வுகளுக்கான சிறந்த ஆலோசனைகள் வழங்கப்பட்டது.

- 19.02.2025 அன்று வணிகவியல் துறை மற்றும் தொழில் நிர்வாகவியல் துறை இணைந்து நடத்திய பட்டயக் கணக்காளர் விழிப்புணர்வு கருத்தரங்கில், பிரைம் அகாடமி மேலாண்மை அறிவியல் நிறுவன இயக்குனர் முனைவர் வெங்கடாச்சலம் கலந்து கொண்டு பட்டயக் கணக்காளர் பற்றிய முக்கியத்துவம், படிப்பின் விவரங்கள் மற்றும் இப்படிப்பிற்கு வேலைவாய்ப்புகள் அதிகம் இருக்கிறது என்று மாணவ மாணவிகளிடையே சிறப்புரையாற்றினார். மேலும், இதில் பேராசிரியர்கள் மற்றும் 400 மாணவ மாணவிகளுக்கு மேல் கலந்து கொண்டு பயனடைந்தனர். இந்நிகழ்ச்சியைக் கல்லூரியின் வணிகவியல் துறைத்தலைவர் முனைவர் லதா ஒருங்கிணைத்து நடத்தினார். வணிகவியல் துறைப் பேராசிரியர் முனைவர் பாரதி நன்றியுரையாற்றினார்.

- வணிகவியல் மன்ற நிறைவு விழாக் கூட்டமானது 20.03.2025 அன்று நடைபெற்றது. இவ்விழாவில் திரு. செழியன் அவர்கள் பட்டயக் கணக்காளர் தேர்வினை எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும் மற்றும் தற்போதைய வேலைவாய்ப்புகளையும் பெறுவதற்கான ஆலோசனை வழங்கி, புத்துணர்ச்சி தரும் மற்றும் ஊக்கப்படுத்தும் அறிவுரைகளையும் துறை மாணவ – மாணவிகளுக்கு வழங்கினார்.

1. தொழில் நிர்வாகவியல் துறை சார்பில் பணப்பட்டுவாடா மற்றும் தீர்வு அமைப்புகள் துறை சார்பில் இணையதள வங்கியியல் விழிப்புணர்வு முகாம் 14.02.2025 அன்று நடைபெற்றது. இதில் 500க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.
2. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறை சார்பாக 30.02.2025ல் நடத்தப்பட்ட திறன் மேம்பாட்டிற்கான பேச்சுப் போட்டியில் மு. மலர்விழி (முதலாம் ஆண்டு முதல் சுழற்சி) முதல் பரிசு பெற்றார்.
3. J.J. கலை மற்றும் அறிவியல் கல்லூரி, புதுக்கோட்டையில் 07.02.2025ல் நடந்த சைனர் ஜியா (Synergia2k25) மேலாண்மை நிகழ்வில் T. பவதாரணி (இரண்டாம் ஆண்டு முதல் சுழற்சி) சிறந்த மேலாளருக்கான போட்டியில் முதல் பரிசு பெற்றார்.
4. நமது கல்லூரியில் நடந்த மகளிர் தின விழாவிற்காக நடத்தப்பட்ட போட்டியில் முதலாம் ஆண்டு (முதல் சுழற்சி) மாணவிகள் குழு நடனத்திற்காக மு. அபிராமி, வெ. பிரியதர்ஷினி, அழ. அன்னபூரணி, ப. முத்துலெட்சுமி இரண்டாம் பரிசும், ஓவியப் போட்டியில் K. உமாதர்ஷினி மூன்றாம் பரிசும் பெற்றனர்.
5. கல்லூரிக்கு இடையேயான மேலாண்மை போட்டி கிட் & கிம் கல்லூரியில் 18.10.2024 அன்று நடைபெற்றது. இதில் கனெக்ஷன் (Connection) நிகழ்வில் பொ. பிரியா (இரண்டாம் ஆண்டு) முதல் பரிசும், அ. கனிமொழி (இரண்டாம் ஆண்டு) மூன்றாம் பரிசும் பெற்றனர். மேலும் இந்நிகழ்வில் சிறந்த மேலாளர் முதல் பரிசு பவதாரணியும், மேலாண்மை வினாடி வினாவில் இ. நர்மதா (மூன்றாம் ஆண்டு) மூன்றாம் பரிசும் பெற்றனர்.
6. மௌண்ட் சியோன் பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற மேலாண்மை நிகழ்வில் தந்திர பட்டிமன்றம் (Tactical Debate) ஐ பவதாரணி (இரண்டாம் ஆண்டு) முதல் பரிசும், மு. வெங்கடேஷ் (இரண்டாம் ஆண்டு) இரண்டாம் பரிசும் பெற்றனர். மேலும் வியாபார வினாடி வினா (Busines Quiz) நிகழ்வில் வி. ராஜேஸ்வரி (இரண்டாம் ஆண்டு) முதல் பரிசும் பெற்றனர்.
7. ஒரு நாள் பயிற்சிப்பட்டறை (One day Workshop on Cultivating Growth and Innovation for Career and life) சையது அம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்றது. தொழில் நிர்வாகவியல் துறைத் தலைவர் முனைவர் மு. தியாகராஜன் அவர்கள் இதில் முதன்மை விருந்தினர் (Cheif guest) ஆகக் கலந்து கொண்டு மாணவர்களுக்கு வேலை வாய்ப்பு திறன்களைப் பற்றி எடுத்துரைத்தார்.
8. நமது கல்லூரியில் 17.03.2025 அன்று நடைபெற்ற நுண்கலை மன்ற போட்டியில் காய்கறி செதுக்குதல் R. கயல்விழி இரண்டாம் பரிசு (I BBA, I Shift) கழிவுகளில் இருந்து கலை R. புவனேஸ்வரி (I BBA I Shift) மூன்றாம் பரிசு பெற்று வெற்றி பெற்றனர்.
9. நமது கல்லூரியில் 18.03.2025 அன்று நுண்கலை மன்றத்தால் நடத்தப்பட்ட அடுப்பில்லாச் சமையல் போட்டியில் A. Mushin Wafir (I BBA, I Shift), Atheeb Meera மூன்றாம் பரிசு பெற்றனர்.
10. நமது கல்லூரியில் 20.03.2025 அன்று நுண்கலை மன்றத்தால் நடத்தப்பட்ட மௌன நாடகத்தில் முதலாம் ஆண்டு முதல் சுழற்சி க. தீபிகா, பா. ரித்திகா, சா. கமலம், பா. பிரபாவதி, கோ. அகல்யா, அ. திவ்யா இரண்டாம் பரிசு பெற்றனர்.




சுவாசம் அளித்து
குருதி பெருக்கி
உள்ளம் அறிந்து
உண்மை சொல்லி
தன்மானம் போற்ற
தரணியில் தவழவிட்டாள்
என் தாய்!!



என் முகம் பார்க்கும் முன்பே!
என் குரல் கேட்கும் முன்பே!
என் குணம் அறியும் முன்பே!
என்னை நேசித்த ஓர் இதயம்!
என் **அம்மா** மட்டுமே!!



**M. Archana**
B.Com I-A

கணிதவியல் துறையின் 2024 - 2025 ஆம் கல்வி ஆண்டின் கணிதவியல் மன்ற மாணவர் செயலாளராக K. அபிமன்யு (PG), V. சரோஜா (UG) ஆகியோர் தேர்வு செய்யப்பட்டு கணிதவியல் மன்றம் சிறப்புடன் செயல்பட்டு வருகிறது. இக்கல்வியாண்டில் 12 மாணவர்கள் முதுநிலை வகுப்பிலும், 68 மாணவர்கள் இளநிலை வகுப்பிலும் முதலாமாண்டு சேர்ந்து கல்வி பயின்று வருகின்றனர். கணிதவியல் துறைத் தலைவர் முனைவர் அ.பொ. தனபாலன் அவர்கள் வழிகாட்டுதலின் கீழ் Mrs.RM. சிவகாமசுந்தரி மற்றும் Mrs G. அமுதா ஆகியோர் கணிதவியல் முனைவர் பட்டம் பெற்றுள்ளனர்.

2015 - 2016 ஆம் கல்வி ஆண்டு முதல் ஒவ்வொரு வருடமும் முதுநிலை கணித மாணவர்கள் பயன்பெறும் வகையில் "Special Series Lecture" நடத்தப்பட்டு வருகிறது. இக்கல்வியாண்டில் கணிதவியல் துறைத் தலைவர் முனைவர் அ.பொ. தனபாலன் அவர்கள் தலைமையில் இளையான்குடி Dr. ஜாகீர் ஹுசைன் கல்லூரியின் உதவிப் பேராசிரியர் முனைவர் M. முத்துச்சாமி அவர்கள் முதுநிலை மாணவர்களுக்கு"Some Properties of Fascinating Numbers" என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றினார்.

கணிதவியல் மன்றவிழா மற்றும் இறுதியாண்டு மாணவர்கள் பிரியாவிடை நிகழ்வு 29.03.2025 அன்று முதல்வர் முனைவர் அ. பெத்தாலெட்சுமி அவர்கள் தலைமையில், சிறப்பு விருந்தினராக பள்ளத்தூர் சீதாலெட்சுமி ஆச்சி மகளிர் கல்லூரியின் இணைப் பேராசிரியர் முனைவர் வாசுகி அவர்கள் மற்றும் கணிதத் துறைத் தலைவர், துறையின் அனைத்து பேராசிரியர்கள், மாணவர்களும் கலந்து கொண்டு சிறப்பாக நடைபெற்றது. இம்மன்ற விழாவில் முதல்வர் முனைவர் அ. பெத்தாலெட்சுமி அவர்கள் தலைமை உரை நிகழ்த்தினார். மேலும் இணைப் பேராசிரியர் முனைவர் வாசுகி அவர்கள் சிறப்புரை ஆற்றினார். துறைப் பேராசிரியர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து மாணவ, மாணவியரை ஊக்கப்படுத்திக் கணிதத்துறை அளவில் கணிதம் சார்ந்த 1) வினாடி – வினா போட்டி, 2) ரங்கோலி, 3) கணித மாதிரிகள் மற்றும் பேச்சுப் போட்டிகள் ஆகியவற்றை 29.03.2025க்கு முன்னதாக நடத்தி முடிக்கப்பட்டன. அப்போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவியருக்கு மன்ற விழாவில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. போட்டிகளை நடத்திய அனைத்து பேராசிரியர்களுக்கும் நன்றியினையும் வெற்றி பெற்ற மாணவ, மாணவியருக்குப் பாராட்டுதல்களையும் விழாவில் துறைத் தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இக்கல்வியாண்டில், சிவகங்கை மாவட்ட வேலை வாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டு மையம் சார்பாக நடைபெற்ற கட்டுரைப் போட்டியில் இளநிலை முதலாமாண்டு மாணவி அனுகிரஹா லெட்சுமி கலந்து கொண்டு இரண்டாம் பரிசு பெற்று நம் துறைக்குப் பெருமை சேர்த்துள்ளார். மேலும் J.J. கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற MATHLETESல் கலந்து கொண்டு 1) R. சுவேதா (III B.Sc, S-I) மாணவி ஓவியப் போட்டியில் மூன்றாம் பரிசையும், 2) S. ஷாலினி, P. பவிதா (III B.Sc, S-I) ரங்கோலி போட்டியிலும், 3) N. மகேந்திரன், AL. ஹரிபிரசாத் (III B.Sc, S-I) Math fun என்ற போட்டியில் இரண்டாம் பரிசையும், 4) P. வாசு (III B.Sc, S-I) Math Model என்ற போட்டியில் இரண்டாம் பரிசையும் பெற்று கணிதத் துறைக்குப் பெருமை சேர்த்துள்ளனர். 14.03.2025 அன்று அழகப்பா பல்கலைக் கழக கணிதவியல் துறையில் நடைபெற்ற மாநில அளவிலான போட்டியில் 1) K. அபிமன்யு (II M.Sc), 2) P.பிரின்சி (I M.Sc), 3) AR. வினோதன் (I M.Sc) ஆகியோர் கலந்து கொண்டனர்.

**To name the day of any date during : 1900 - 1999**

Add Together :

1. The last two digits of the year
2. 1/4th of the above neglecting fraction
3. Number of the date
4. Code number for the month.

**<u>Code number for the month :</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| January | - 0 | May | - 1 | September | - 5 |
| February | - 3 | June | - 4 | October | - 0 |
| March | - 3 | July | - 6 | November | - 3 |
| April | - 6 | August | - 2 | December | - 5 |

If the reminder is 0, then the day is Sunday

If the reminder is 1, then the day is Monday and so on.

In a leap year if the date falls in January or February Subtract 1 from the sum.

To name the day of any day during : 1800 - 1899 and 2000 - 2099

For the dates in 1800 - 1899, add 2 to the sum.

For the dates in 2000 - 2099, add 6 to the sum.Then Proceed as above.






**முனைவர் அ.பொ. தனபாலன்**
இணைப்பேராசிரியர்
கணிதவியல் துறை

இயற்பியல் துறை மாணவர் பேரவை சார்பாக 28.02.2025 அன்று தேசிய அறிவியல் தினத்தை முன்னிட்டு கட்டுரைப்போட்டி, பேச்சு போட்டி மற்றும் ரங்கோலி போட்டிகள் நடத்தப்பட்டன. மாணவர் பேரவை விழா 6.3.2025 அன்று கொண்டாடப்பட்டது. கல்லூரி முதல்வர் முனைவர் அ. பெத்தாலெட்சுமி அவர்கள் தலைமையேற்றார்கள். இயற்பியல் துறைத்தலைவர் திருமதி கவிதா அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். பேரா. S. கோச்சடை, இயற்பியல் துறை (ஓய்வு) அவர்கள் சிறப்பு விருந்தினராக பங்கேற்று சிறப்புரையாற்றினார். தேசிய அறிவியல் தினப் போட்டிகளில் பங்கேற்றுப் பரிசு பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. துறை மாணவ, மாணவியரின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. இவ்விழாவினை மாணவ பேரவை ஒருங்கிணைப்பாளர்கள் ஏற்பாடு செய்தனர்.

### இரண்டு நாள் சர்வதேச இயற்பியல் கருத்தரங்கம்

அழகப்பா அரசு கலைக் கல்லூரியின் இயற்பியல் துறை சார்பாக 13/03/2025 மற்றும் 14/03/2025 ஆகிய இரண்டு நாட்கள் “பொருட்கள் மற்றும் சமூகத்திற்கான பயன்பாட்டு அறிவியல்” என்ற தலைப்பில் பன்னாட்டு கருத்தரங்கம் நடைபெற்றது. அழகப்பா பல்கலைக்கழகத்தின் மேனாள் துணைவேந்தர் முனைவர் சுப்பையா அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார். அழகப்பா பல்கலைக்கழகத்தின் இயற்பியல் துறை தலைவர் முனைவர் சங்கர நாராயணன் வாழ்த்துரை வழங்கினார். திருச்சிராப்பள்ளி ராமன் ஆய்வு மையத்தின் சார்பாக, கோவிலூர் நாச்சியப்பா சுவாமிகள் கலை அறிவியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் சந்திரமோகன் வாழ்த்துரை வழங்கினார்.

இக்கருத்தரங்கில் மலேசியா பல்கலைக்கழக பேராசிரியர் ரமேஷ்காசி, கொரியப் பல்கலைக்கழக பேராசிரியர் ராமர் ராஜமணிகண்டன், பெங்களூர் இந்திய அறிவியல் கழக விஞ்ஞானி முனைவர் ரமேஷ், டெல்லி மத்திய இயற்பியல் ஆய்வக விஞ்ஞானி முனைவர் விஜயன், கற்பகம் நிகர் நிலைப் பல்கலைக்கழக பேராசிரியர் முனைவர் மணிகண்டன், புருனோ சந்திரசேகர் மற்றும் காரைக்குடி சிக்ரி விஞ்ஞானி தமிழரசன், அழகப்பா பல்கலைக்கழக அறிவியல் புல முதன்மையர் முனைவர் ஜெயகாந்தன் ஆகியோர் கலந்து கொண்டு பல்வேறு தலைப்புகளில் கருத்துரையாற்றினார். நிறைவு விழாவில் அழகப்பா பல்கலைக்கழகத்தின் தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் முனைவர் ஜோதிபாசு சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு பன்னாட்டுக் கருத்தரங்கின் பொருள் குறித்து சிறப்புரையாற்றினர். பெரம்பலூர் தந்தை ஹான்ஸ் ரோவர் கல்லூரியின் முதல்வர் முனைவர் ரவிச்சந்திரன் கருத்தரங்கின் முக்கியத்துவம் குறித்து பேசினார். வேப்பந்தட்டை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் இயற்பியல் துறை தலைவர் முனைவர் பாஸ்கரன் மற்றும் பயோமி இயக்குநர் முனைவர் ஜெகதீஸ்வரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

இக்கருத்தரங்கில் பேராசிரியர்கள் மாணவர்களின் சார்பாக மொத்தம் 156 ஆய்வுக் கட்டுரைகள் வாசிக்கப்பட்டன. மேலும் அழகப்பா அரசு கலைக் கல்லூரியுடன் தந்தை ஹான்ஸ் ரோவர் கல்லூரியும், காரைக்குடி பயோமியும் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டன. இக்கருத்தரங்கில் 64 கல்வி நிறுவனங்களிலிருந்து ஏராளமான பேராசிரியர்கள், ஆராய்ச்சியாளர்கள், மாணவ, மாணவிகள் ஆர்வமுடன் கலந்து கொண்டனர். மேலும் சிறந்த ஆய்வுக்கட்டுரைக்கு விருது மற்றும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. இக்கருத்தரங்கில் இயற்பியல் துறை பேராசிரியர் முனைவர் சி. சுப்பு மற்றும் முனைவர். மா. கருணாகரன் ஆகியோர் ஒருங்கிணைப்பாளராக செயல்பட்டனர்.

### ஒரு நாள் சர்வதேச இயற்பியல் கருத்தரங்கம்

அழகப்பா அரசு கலைக்கல்லூரியின் இயற்பியல் துறை சார்பாக 19/9/2024 அன்று “பொருள் அறிவியலில் ஆராய்ச்சி வாய்ப்புகள்” என்ற தலைப்பில் சர்வதேச கருத்தரங்கம் நடைபெற்றது. மேற்கு ஆப்பிரிக்க லோம் பல்கலைக்கழக பேராசிரியர் மொசபேலா பெனிட்டோ சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மெல்லட்டுக்களை கொண்டு உருவாகும் சூரிய மின்கலன் பற்றி பேசினார். பூண்டி புஷ்பம் கல்லூரி இயற்பியல் துறைத் தலைவர் முனைவர். ரவிச்சந்திரன் நானோ பொருட்கள் உருவாக்கம் அதன் பயன்கள் என்ற தலைப்பில் பேசினார். மேலும் காரைக்குடி, அழகப்பா பல்கலைக்கழக உயிரிதகவல் துறை பேராசிரியர் முனைவர். பூமி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்.

இக்கருத்தரங்கிற்குப் பல்வேறு கல்லூரியைச் சேர்ந்த மாணவ மாணவியர் கலந்து கொண்டு சிறப்பு செய்தனர். வெற்றிகரமாக நடைபெற்ற இந்நிகழ்விற்கு இயற்பியல் துறை பேராசிரியர்கள் முனைவர் சி. சுப்பு மற்றும் முனைவர் மா. கருணாகரன் ஆகியோர் ஒருங்கிணைப்பாளர்களாக செயல்பட்டனர்.

27.03.2025 அன்று வேதியியல் மன்ற விழா சிறப்பாக நடைபெற்றது. இதில் பொறுப்பு முதல்வர் முனைவர் ஐ. நிலோபர் பேகம் தலைமை தாங்க, துறைத்தலைவர் ரெ. நடராஜன் முன்னிலை வகிக்க மன்ற செயலாளர் முனைவர் அ. ஜான் ரெத்தினம் விழாவிற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார். விழாவிற்கான விருந்தினர் முனைவர் அருண் சந்திரன் மூத்த விஞ்ஞானி மையமின் வேதியியல் ஆய்வகம் சிறப்புரை நிகழ்த்த, முனைவர் அண. செந்தில் குமார் அறிமுகப்படுத்தினார். விழாவில் மாணவச் செயலாளர்கள் செல்வி ஜி. லக்ஷ்மி வரவேற்புரை நிகழ்த்தினார். செல்வி வ. பத்மஜா நன்றியுரை கூறினார். விழாவை மாணவிகள் ஜனனி, வைஷ்ணவி ஒருங்கிணைத்தனர்.

மைய மின் வேதியியல் ஆய்வகம் நடத்திய "INDIA INTERNATION SCIENCE FESTIVAL" (IISF - 2024) ஒரு நாள் நிகழ்வின் இளங்கலை இரண்டாம் ஆண்டு மாணவிகள் ஜனனி, ஹரிதா, ஹரிணி பங்கு பெற்றனர்.

சிவகங்கை, இராமநாதபுரம் மாவட்டத்திற்குட்பட்ட இரண்டாம் ஆண்டு 'நான் முதல்வர்' - HACKTHAN போட்டியில் கலந்துகொண்ட மாணவர்கள் இரண்டாம் பரிசு பெற்றனர்.




வீணாகும் நிலத்தையும்
விளைய வைப்பவன்;
வெயில் மழை பாராமல்
வேர்வை சிந்தியவன்;
அன்னத்தை அளவில்லாமல்
அள்ளிக் கொடுப்பவன்;
அகிலத்தின் ஆளுமைக்கு
அஸ்திவாரமாய் இருப்பவன்;
உழைப்பை முதலீடாக்கி
உயிரை காப்பவன்;
உரிமையை உலகிற்கு
உரக்கச் சொன்னவன்
வறுமையால் வயிற்றை
வளர்த்து வைத்தவன்
வலிகளிலும் வலிமையை
வளர்த்துக் காட்டியவன்
தன்னலமின்றி தனித்து நிற்பவன்
தன்னாட்டிலேயே தனியாய் நிற்பவன்
அவன் தான் "**விவசாயி**"




புல்வெளியின் புன்னகையால்
பூரிப்படைகிறேன்
பசுமையின் பாசத்திற்கு
பணிந்து விடுகிறேன்
பாயும் நதியில் தாகம்
தீர்க்கிறேன்
பறந்து விரிந்த வானத்தை
பார்த்து வியக்கிறேன்
உயிர்வாழ காற்றை
சுவாசித்தேன்
உயிர்வீழ நிலத்தை
காண்கிறேன்
அம்மாவின் அன்பைப் போல
அணைத்துக் கொள்கிறேன்
வாழ வழி விதித்ததற்கு
நன்றி கூறினேன்
**என் இயற்கை இளவரசியே**



**சந்தியாஸ்ரீநிதி. லெ**
இளநிலை வணிகவியல் துறை



## இரண்டு மரம்

ஒரு ஆற்றங்கரையில் இரண்டு பெரிய மரம் இருந்தது. அந்த வழியாக வந்த ஒரு சிட்டு குருவி மரத்திடம் கேட்டது. மழை காலம் தொடங்க இருப்பதால், நானும் என் குஞ்சிகளும் வசிக்க கூடு கட்ட அனுமதிக்க முடியுமா? என்றது

முதலில் இருந்த மரம் முடியாது என்றது. அடுத்த மரத்திடம் கேட்டது அது அனுமதித்தது.

குருவி கூடு கட்டி சந்தோசமாக வாழ்ந்து கொண்டு இருந்த நேரம். அன்று பலத்த மழை ஆற்றில் வெள்ளம் வந்து முதல் மரத்தை இழுத்து சென்றது.

தண்ணீரில் இழுத்துச்செல்லும் பொழுது குருவி சிரித்து கொண்டே சொன்னது. எனக்கு வசிக்க கூடு கட்ட இடம் இல்லை என்று சொன்னதால் இப்போது தண்ணீரில் அடித்து செல்லபடுகிறாய் என்றது.

அதற்கு மரம் கூறிய பதில்

எனக்கு தெரியும். நான் வலுவிழந்து விட்டேன். எப்படியும் இந்த மழைக்கு நான் தாங்க மாட்டேன் தண்ணீரில் அடித்து செல்லப்படுவேன். நீயும் உன் குழந்தைகளும் நல்ல வாழ்க்கையை வாழ வேண்டும் என்று தான் உனக்கு இடம் இல்லை என்றேன்.

மன்னித்து விடு என்றது.

உங்களை யாரும் நிராகரித்தால் அவர்களை தவறாக நினைக்காதீர்கள்.

**மு. தினேஷ்**
தொழில் நிர்வாகவியல்
முதலாம் ஆண்டு முதல் சுழற்சி



Report on the Activities of Computer Science Department during the Academic year 2024 - 2025. Department of Computer Science encouraging the students to participate in various competitions like in other colleges.

Seminars / Competitions / Quiz / Paper Presentation participated by our students.

| S.No. | Name | College | Programe | Date | Prize |
|---|---|---|---|---|---|
| 1. | V. Nithya Shree | Fatima College, Madurai | Techmeet-2024 | 02.08.2024 | Participated |
| 2. | R. Madhan | Yadava College, Madurai | Bugfixing (Debugging) | 05.03.2025 | First |
| 3. | P. Srithaksha | Yadava College, Madurai | Ideas 4 free (Paper Presentation) | 05.03.2025 | Second |
| 4. | P. Mathumitha | Yadava College, Madurai | Ideas 4 free (Paper Presentation) | 05.03.2025 | Second |
| 5. | R. Madhan | Yadava College, Madurai | Punching Logic (Software Development) | 05.03.2025 | Third |
| 6. | R. Bharath | Alagappa Govt. Arts College, Karaikudi | Quiz | 07.01.2025 | - |
| 7. | P. Mathumitha | Alagappa Govt. Arts College, Karaikudi | Quiz | 07.01.2025 | - |
| 8. | Periyaiya | Department of Computer Science, Govt. Arts and Science College, Thennangur | Optimizing Market Basket Analysis : Enhancing Apriori Algorithm Performance with Chunk - Based Processing and Visualization Techniques (Paper Presentation) | 14.02.2025 | International Conference |
| 9. | P. Mathumitha | American College (Inter college Meet - Bytes 2K25), Madurai | Paper Presentation | 14.03.2025 | First |
| 10. | P. Srithaksha | American College (Inter college Meet - Bytes 2K25), Madurai | Paper Presentation | 14.03.2025 | First |
| 11. | S. Sakthi Ganesh | American College (Inter college Meet - Bytes 2K25), Madurai | Quiz | 14.03.2025 | First |
| 12. | V. Sriram | American College (Inter college Meet - Bytes 2K25), Madurai | Quiz | 14.03.2025 | First |

| S.No. | Name | College | Programe | Date | Prize |
|---|---|---|---|---|---|
| 13. | M. Manivel | American College (Inter college Meet - Bytes 2K25), Madurai | Web Development | 14.03.2025 | First |
| 14. | M. Manivel | American College (Inter college Meet - Bytes 2K25), Madurai | Game Development | 14.03.2025 | First |
| 15. | R. Madhan | American College (Inter college Meet - Bytes 2K25), Madurai | JAVA Program Development | 14.03.2025 | First |
| 16. | RV. Saikrishna | American College (Inter college Meet - Bytes 2K25), Madurai | Pencil Drawing | 14.03.2025 | Third |
| 17. | P. Srithaksha | American College (Inter college Meet - Bytes 2K25), Madurai | Start of the Event | 14.03.2025 | First |

## தன்னம்பிக்கை



தோற்றால் புலம்பாதே
போராடு...!!!

கிண்டலடித்தால் கலங்காதே,
மன்னித்துவிடு...!!!



தள்ளினால் தளராதே,
துள்ளியெழு...!!!

நஷ்டப்பட்டால் நடுங்காதே
நிதானமாய் யோசி...!

ஏமாந்துவிட்டால் ஏங்காதே...!!
எதிர்த்து நில்
வெற்றி நிச்சயம்!



**S. Rajashri**
B.Com I-B





**P. Divya dharshini**
B.Com I-A

Report on the Activities of Computer Applications during the Academic year 2024 - 2025. Department of Computer Science encouraging the students to participate in various competitions in other colleges. The following is the list of students participated in other colleges, Events and the prizes they won.

Seminars / Competitions / Quiz / Paper Presentation participated by our students.

| S.No. | Name | College | Programe | Prize |
|---|---|---|---|---|
| 1. | K. Arthi | Sivagangai Book Festival | Speech | Third |
| 2. | K. Arthi | Mudiyarasanar Avaikalam | Speech | Second |
| 3. | K. Arthi | Tamil Valarchi Thurai | Speech | Second |
| 4. | K. Arthi | Anna Tamilkalagam | Speech | Third |
| 5. | P. Priyaharshini | Dr. Zakir Husain College, Ilayangudi | Table Tennis | First |
| 6. | P. Priyaharshini | AMET University Chennai | Table Tennis | Quarter Final |
| 7. | J. Rasmi Fathima | Dr. Zakir Husain College, Ilayangudi | Table Tennis | First |
| 8. | K. Amoka | Mohammed Sathak Enggineering College, Keelakarai | Football | Third |
| 9. | M. Elaveni | Asmitha Hockey Leaque Match Chennai | Hockey | Fourth |
| 10. | Padmavathi | Alagappa Govt. Arts College, Karaikudi | Badminton | Third |
| 11. | A. Ishwarya | Periyar University Madurai | Handball | Second |
| 12. | A. Ishwarya | NCC National Camp Madurai | NCC | National Camp |

# வறுமை



உடல் மெலிந்து விட்டது
வயிறு ஒட்டி விட்டது...

செருப்புத் தேய்வது போல்
தேகமும் தேய்ந்து விட்டது...

“செல்வந்தரே அடிப்பதாயினும்
எச்சில் கையால் அடியுங்கள்
கன்னம் ஒட்டிய பருக்கையில் பசியாறுவேன்”

ஓடவோ உதைபடவோ வலுவில்லை...
வறுமைக்கு ...
ஏன் என் மேல் இவ்வளவு உரிமை ...

வறுமை என்ற கொடுமையை
செல்வம் என்ற போர்வையால்
மறைத்து வாழ்கிறோம்...

தேவைக்குத் தேடுங்கள்
வறுமையில் வாடுவோர்
இன்னமும் உண்டு...

“உதவிக்கரம் நீண்டால் இல்லாமை வராது...
உணவு உண்ணாமல் இரைப்பை நிரம்பாது...

கற்றாழை ஒரு போதும் ருசிக்காது
காற்றைக் குடித்தும் உயிர் வாழமுடியாது!...”

இருக்கிறவனுக்கு தெரியாது
உணவின் அருமை...

இல்லாதவனைக் கேட்டுப் பார்
இது தான் அவன் வாழ்க்கை
என்று கூறுவான்!



அ. திவ்யா
தொழில் நிர்வாகவியல் துறை

19/08/2024 அன்று தாவரவியல் துறை இளங்கலை இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்கு பெற்றோர் – ஆசிரியர் சந்திப்பு நடைபெற்றது.

10/09/2024 அன்று சுற்றுச்சூழல் விழிப்புணர்வு குறித்து ஒருநாள் தேசிய கருத்தரங்கம் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராகக் கேரள மாநிலத்தின் தேசிய மருத்துவத் தாவரங்கள் வாரியத்தின் முனைவர் P.S. உதயன் கலந்து கொண்டு, மேற்குத்தொடர்ச்சி மலையில் உள்ள பல்லுயிர்களின் எதிர்காலம் குறித்தும், மனித ஆரோக்கியத்தில் மருத்துவத் தாவரத்தின் பங்கு குறித்தும் பேசினார். இதில் 200க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

18/12/2024 அன்று சிவகங்கை மாவட்ட அளவில் நடைபெற்ற குறும்படம் போட்டியில் தாவரவியல் துறையைச் சார்ந்த மூன்றாம் ஆண்டு மாணவிகள் மாலதி, யாழினி, புவனேஸ்வரி மற்றும் சரண்யா ஆகியோர் கலந்து கொண்டு மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் கோவிசெழியன் அவர்களிடம் இரண்டாம் பரிசு பெற்றனர்.

20/01/2025 அன்று சுயதொழில் மற்றும் வங்கிக்கடன் மானியத் தொகை பற்றித் தாவரவியல் துறை மாணவர்களிடம் வணிகவியல் துறை இணைப்பேராசிரியர் முனைவர் A. ரமேஷ் அவர்கள் விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

22/02/2025 அன்று தாவரவியல் துறை மற்றும் சுற்றுச்சூழல் குழுமம் சார்பில் நடைபெற்ற காலநிலை நெருக்கடி குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக மாநில சுற்றுச்சூழல் செயல்பாட்டு ஆலோசகர் அவினாஷ் திரவியம் மற்றும் மீள்தன்மை தொண்டு நிறுவன திட்ட அலுவலர் ராஜலெட்சுமி ஆகியோர் மாணவர்களுக்குச் சுற்றுச்சூழல் பாதிப்புகள் குறித்தும் மற்றும் மாசுபாட்டைத் தடுப்பது குறித்தும் கலந்துரையாடினார்கள்.

26/02/2025 மற்றும் 27/02/2025 ஆகிய தேதிகளில் திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் நடைபெற்ற இரண்டு நாள் தேசிய கருத்தரங்கத்தில் தாவரவியல் துறை முதுகலை இரண்டாம் ஆண்டு மற்றும் முதலாமாண்டு மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர். இக்கருத்தரங்கத்தில் முதுகலை முதலாமாண்டு மாணவர்கள் ஹாஜிரா சுமையா பேகம் மற்றும் அபிராமி ஆகியோர் சிறந்த ஆய்வறிக்கைக்கான இரண்டாம் பரிசு பெற்றனர்.

## கல்லூரி வாழ்க்கை



இலக்கியம் சுவைத்து
இலக்கணம் படித்து
சிறுகதைகளைச் சேகரித்து
புதினம் படித்து
புத்துணர்ச்சி பெற்று
பேராசிரியர் பெருமக்களின்
அறிவுரைகள் கேட்டு
வகுப்பறையில் சத்தமிட்டு மகிழ்ந்து
பல சின்னஞ்சிறு ஊடல்கள் இட்டு
அளவில்லா அன்பினை ஊட்டி
இன்ப, துன்பங்களை பகிர்ந்து
முதலாமாண்டில் விதையாய் முளைத்து
மூன்றாமாண்டில் விருட்சமாய் வளர்ந்து
எங்கிருந்தோ காற்றாய் வந்து
கவிதையாய் மாறி உறவால்
இணைந்தோம்
முதலாமாண்டில் தொடங்கி
இறுதியாண்டில் பயணிக்கும்
மாணவர்கள் அனைவருக்கும்
அறிவால் உயர்ந்த மகிழ்ச்சியும்
பிரிய போகும் சோகத்தை எண்ணி
வருத்தமும் சேர்ந்து நகர்கிறது
இன்னும் சில நாட்களே!
கண்ணீருடன் கடந்து செல்கிறது
கல்லூரி வாழ்க்கை
என்றும் அழியா நினைவுகளுடன்



கு. ஸ்ரீமதி
இளங்கலைத் தமிழ்
மூன்றாம் ஆண்டு

## ஏக்கம்



வண்ண வண்ண விளக்குகள்
வானுயர்ந்த மாளிகை
மிகப்பெரிய தூண்கள்
கண்ணை பறிக்கும் தோரணம்
கலை நயமிக்க வாயில் கதவுகள்
எட்டிவிடும் வாயிற்படிகள்
எட்டாத சாளரம்
அவளுகென்று ஒரு தனியறை
அவள் படிக்க நூலகம்
மனம் விட்டு பேச பூஜை அறை
விளையாடத் தோட்டம்
அத்தனையும் ஒன்று சேர்ந்த
மாளிகையில் அவள் உறங்கி
கொண்டிருந்தாள்
திடீரென்று அவள் மீது
விழுந்த மழைத்துளிகள்
ஒழுகும் குடிசையில்
கனவு களைந்தது எழுந்தாள்
நனைந்த இடத்தில்
மீண்டும் உறங்க இடமில்லாமல்!

அழகப்பா அரசு கலைக் கல்லூரி விலங்கியல் துறையில் 1947–இல் இளம் அறிவியல் படிப்போடு துவங்கப்பட்ட இத்துறை பட்ட மேல் படிப்பு மற்றும் ஆராய்ச்சி படிப்புகளுடன் விரிவடைந்து துறைத்தலைவர் மற்றும் 9 பேராசிரியர்களுடன் செயல்பட்டு வருகிறது. துறையில் 2024-25 ஆம் கல்வியாண்டில் கீழ்க்கண்ட நிகழ்வுகள் நடைபெற்றன.

விலங்கியல் துறையின் விலங்கியல் மன்றத்திற்கு இக்கல்வியாண்டிற்கான தலைவராக முனைவர் மு. போதகுரு அவர்களும் மன்ற செயலாளராக முனைவர் எஸ்.எஸ்.என். சோமசுந்தரம் அவர்களும் மன்றத்தின் மாணவ, மாணவியர் செயலாளராக செல்வி. M. உமையாள் மீனாட்சி மற்றும் இணைசெயலாளர்களாக செல்வி S. சுகைனா மற்றும் R. பவித்ரா, S. தீபக், L. முத்துலட்சுமி ஆகியோர் உறுப்பினர்களாக தேர்வு செய்யப்பட்டனர்.

01.10.2024 அன்று 'சமூக வளர்ச்சியில் கல்வியின் பங்கு' என்ற தலைப்பில் முனைவர் வேலுச்சாமி அழகப்பா பல்கலைக்கழகம் அவர்கள் மாணவர்களுக்குச் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றினார். மேலும் மாணவ மாணவியர் பல்வேறு திறமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும் எனத் தெளிவாக விளக்கினார்.

26.09.2024 அன்று இளங்கலை மூன்றாம் ஆண்டு மாணவ மாணவியர்களைக் களப்பணி ஆய்விற்காக ராமநாதபுரத்தில் உள்ள குருசேடைத் தீவு மற்றும் பாம்பன் பகுதி ஆகிய இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு களப்பணி மேற்கொள்ளப்பட்டது.

06.02.2025 மற்றும் 07.02.2025 ஆகிய இரண்டு நாட்கள் அழகப்பா பல்கலைக்கழகத்தில் RECENT TRENDS IN VACCINES AND BIOMATERIAL FOR ANIMAL HEALTH – என்ற தலைப்பில் International Conference நடைபெற்றது. இதில் முதுநிலை இரண்டாம் ஆண்டு மாணவர்கள் கலந்து கொண்டு சிறப்பு சான்றிதழ்கள் பெற்று வந்தனர்.

27.02.2025 மற்றும் 28.02.2025 ஆகிய இரண்டு நாட்களும் சென்னையில் உள்ள சர் தியாகராய கல்லூரியில் RESEARCH INNOVATION AND TRENDS IN LIFE SCIENCE FOR SUSTAINABLE DEVELOP ICRITV SSD-2025 என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது இதில் முதுநிலை முதலாம் ஆண்டு மாணவர்கள் இருவர் கலந்து கொண்டு சிறப்பு சான்றிதழ்களைப் பெற்று வந்தனர்.

சிவகங்கை மாவட்ட அளவில் நடைபெற்ற சிறுகதை எழுதும் போட்டியில் ஏதேனும் ஒரு பாரதியாரின் வரிகள் என்ற தலைப்பில் சிறுகதை படைத்து, சிவகங்கை மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா அஜித் IAS அவர்களிடம் இளம் பாரதி விருது பெற்று சான்றிதழ்களையும் பெற்று வந்தார் முதலாம் ஆண்டு படிக்கும் மாணவி செல்வி காளிமுத்து.

இறுதி ஆண்டு மாணவர்களுக்கு அரசு மற்றும் தனியார் துறையில் வேலைவாய்ப்பு பெறும் வகையில் பயிற்சி மற்றும் வழிகாட்டுதல் வகுப்பு நடத்தப்பட்டு மாணவ, மாணவியர்கள் பயன் பெற்றனர்.

## என் எண்ணங்கள் கவிதையாக

விண்மீனாக உயரத்தில்
ஜொலிக்கிறாய்!
ஆனால் என இருள் மட்டும்
அகற்றவில்லையே...!!!

மழையாக வந்து மணம்
சேர்த்தாய்,
ஆனால் ஒரு துளி கூட
எனக்கென விடவில்லையே...!!!

பேசாமல் இருந்தாலும்
புரிந்து கொள்வது,

தொலைவில் இருந்தாலும்
அருகில் இருப்பது...!!!

வார்த்தைகள் இல்லாமல் கதைகள்
பேசுவாய்,
என் மௌனத்திலும் கருத்து
தேடுவாய்...

நட்பே துணை



மோ. ஜெயபாரதி
இளநிலை வணிகவியல்துறை முதலாமாண்டு





P.Shanmugapriya
BBA - I

பழுத்த இலையொன்று நடனத்தோடு
ஒய்யாரமாய் விழுவதில் தெரிகின்றது
மரணத்தின் அதீத அழகு

காரைக்குடி அழகப்பா அரசு கலைக் கல்லூரியின் புவிஅமைப்பியல் துறையில் 2024 - 2025 ஆம் கல்வியாண்டில் பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்றன. இதில் விருந்தினர் சொற்பொழிவு, தொடர் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் ஆகியன இடம் பெற்றன. இவற்றின் விவரங்கள் உடன் இணைக்கப்பட்டுள்ளது. இத்துடன் மாணவர்களின் கல்விச் சாதனைகளும் இணைக்கப்பட்டுள்ளன.

| வ. எண் | நிகழ்ச்சி | தேதி | நிகழ்ச்சி அமைப்பாளர் பெயர் | பங்கேற்ற மொத்த மாணவர்களின் எண்ணிக்கை | சாதனை |
|---|---|---|---|---|---|
| 1. | AGE - 24 | 06/04/2024 & 07/04/2024 | அண்ணா பல்கலைக்கழகம் | 16 | முதல் பரிசு |
| | | | 2025 | | |
| 1. | ROCK - 25 | 24/01/2025 | அழகப்பா பல்கலைக்கழகம் | 12 | முதல் பரிசு |
| 2. | GEOCASTLE - 25 | 27/02/2025 | அரசு கலைக் கல்லூரி கோயம்புத்தூர் | 12 | முதல் பரிசு |

| வ. எண் | நாள் | நிகழ்வு | தலைமை விருந்தினர் / நிபுணரின் பெயர் மற்றும் முகவரி | தலைப்பு | கலந்து கொண்ட மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1. | 04/03/2024 | மகளிர் தின சிறப்பு சொற்பொழிவு தொடர் - 11 | டாக்டர் அனிதா ஜே.கே. துணை மேலாளர் தொழில்நுட்பம் (சுரங்கம்) இந்தியன் ரேர் எர்த்ஸ் லிமிடெட் (IREL) சாவரா கொல்லம். | சுரங்க நடவடிக்கைகளின் முக்கியமான அம்சங்கள், தலைமைத்துவத்தையும் தொழில்நுட்பத் திறமையையும் வெளிப்படுத்துதல். | 120 |
| 2. | 09/08/2024 | தமிழ் புதல்வன் | மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்குவதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் “தமிழ் புதல்வன்” திட்டத்தைத் தொடங்கி வைத்தார். | தொடக்க விழா | 150 |
| 3. | 13/08/2024 | சொற்பொழிவு | திரு. கார்த்திக், Directional Drilling Engineer Fugro | எண்ணெய் மற்றும் எரிவாயு கிணறு தோண்டும் போது நிகழ்நேர புவிஅமைப்பியல் மதிப்பீட்டு செயல்முறை | 28 |

| வ. எண் | நாள் | நிகழ்வு | தலைமை விருந்தினர் / நிபுணரின் பெயர் மற்றும் முகவரி | தலைப்பு | கலந்து கொண்ட மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 4. | 23/09/2024 & 24/09/2024 | சொற்பொழிவு தொடர் - 13 | முனைவர். புருசோத்தமன், இணைப் பேராசிரியர், சிவில் பொறியியல் துறை, காட்டாங்குளத்தூர் – சென்னை | புவி வேதியியல் பற்றிய விரிவுரை | 28 |
| 5. | 11/12/2024 & 12/12/2024 | சொற்பொழிவு தொடர் - 14 | திரு. ஜெயந்திநாத். மேற்பார்வை புவி அமைப்பியலாளர் ஓ.என்.ஜி.சி | எண்ணெய் மற்றும் எரிவாயு கிணறு தோண்டும் போது & நிகழ்நேர புவிஅமைப்பியல் மதிப்பீட்டு செயல்முறை | 28 |
| 6. | 17/12/2024 | முன்னாள் மாணவர் சந்திப்பு | 1982 - 1985 முன்னாள் மாணவர்கள் | புவி அமைப்பியல் பாடப்பிரிவில் வேலைவாய்ப்பு | 28 |
| 7. | 17/03/2025 to 18/03/2025 | சொற்பொழிவு தொடர் - 15 | பேரா. இராம்மோகன் ஓய்வு பெற்ற பேராசிரியர், புவி அமைப்பியல் துறை, சென்னை பல்கலைக்கழகம், சென்னை | நெருப்பு பாறைகள் பற்றிய விரிவுரை | 28 |
| 8. | 19/03/2025 | அறக்கட்டளை மூலம் நடத்தப்பட்ட பயிற்சிப் பட்டறை - 1 | பேராசிரியர் ஏ.எல். மெய்யப்பன் & எம் சரோஜா அறக்கட்டளை | பெருநிறுவன, தனியார் மற்றும் அரசு சாரா நிறுவனங்களில் புவி அமைப்பியல் பட்டதாரிகளுக்கான வேலை வாய்ப்புகள் | 80 |
| 9. | 20/03/2025 | சொற்பொழிவு தொடர் - 16 | பேரா. இராம்மோகன் ஓய்வு பெற்ற பேராசிரியர், புவி அமைப்பியல் துறை, சென்னை பல்கலைக்கழகம், சென்னை | உருமாறிய பாறைகள் பற்றிய விரிவுரை | 28 |



மு. ஜுஹைனா ஷப்ரின்
இளநிலை வணிகவியல் துறை
முதலாமாண்டு

## நட்பு

பள்ளி என்ற மூன்றெழுத்தில் சேர்ந்தோம்
நட்பு என்ற மூன்றெழுத்தில் இணைந்தோம்
கல்வி என்ற மூன்றெழுத்தை கற்றோம்
தேர்வு என்ற மூன்றெழுத்தில் முயன்றோம்
வெற்றி என்ற மூன்றெழுத்தைக் கண்டோம்
பிரிவு என்ற மூன்றெழுத்தில் பிரிந்தாலும்
நினைவு என்ற மூன்றெழுத்தில் வாழ்வோமே!







R. Reka
B.Com - I - B

நம் கல்லூரியின் உடற்கல்வித்துறை, பேராசிரியர்களையும், மாணவ, மாணவியர்களையும் கொண்ட விளையாட்டு ஆலோசனைக் குழுவை அமைத்து, அதன் ஆலோசனைப்படி செயல்பட்டு வருகிறது. இக்குழு ஆண்டு வரவு செலவுத் திட்டத்தையும், ஏனைய பணிகளையும் ஆராய்ந்து மாணவ, மாணவியர்களுக்குப் பயன்படக்கூடிய வகையில் அறிவுரைகள் வழங்கி வருகிறது.

2024 - 2025ஆம் கல்வியாண்டிற்கான அழகப்பா பல்கலைக்கழக அனைத்து கல்லூரிகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகளில் நம் கல்லூரி அணியினர் கலந்து கொண்டு பெண்கள் Chess, ஆண்கள் Badminton, பெண்கள் Table Tennis ஆகிய போட்டிகளில் முதலிடமும், பெண்கள் Hand Ball, ஆண்கள் Ball Badminton, ஆண்கள் Chess, பெண்கள் Athletics, பெண்கள் Cross Country ஆகிய போட்டிகளில் இரண்டாம் இடமும், ஆண்கள் Kho-Kho, பெண்கள் Ball Badminton ஆண்கள் மேஜை பந்து, பெண்கள் Hockey, பெண்கள் Kabadi ஆகிய போட்டிகளில் மூன்றாம் இடமும் பெற்றுள்ளனர்.

தமிழக அணியில் 2 வீரர்களும், அகில இந்திய பல்கலைக்கழக அளவிலான போட்டிகளில் 6 வீரர்களும், தென்மண்டல பல்கலைக்கழக அளவிலான போட்டிகளில் 33 வீரர்களும் மாநில அளவிலான போட்டிகளில் 26 வீரர்களும் இந்த ஆண்டு நமது கல்லூரியிலிருந்து கலந்து கொண்டனர்.

2025 தமிழக முதலமைச்சர் கோப்பைக்கான பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் நமது கல்லூரி அணியினர் கலந்து கொண்டு வெற்றிப்பெற்றுப் பரிசுத் தொகையாக மொத்தம் ரூ.1,75,000/- பெற்றுள்ளனர்.

நமது கல்லூரியின் 77வது விளையாட்டு விழா 02.04.2025 அன்று நடத்தி முடிக்கப்பட்டது. சிறப்பு விருந்தினராக முனைவர் கு. விஸ்வலிங்கம் உடற்கல்வி இயக்குநர் (பணி நிறைவு) அழகப்பச் செட்டியார் அரசு பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி, காரைக்குடி மற்றும் சிறப்பு அழைப்பாளர்களாக அழகப்பா அரசு கலைக் கல்லூரியின் முன்னாள் விளையாட்டு வீரர்கள் அ. சதீஸ்குமார் (1990-1993 இளங்கலை புவி அமைப்பியல் துறை), அ. ராமநாதன் (1991-1994 இளங்கலை வணிகவியல்) ஆகிய மூவரும் அழைக்கப்பெற்றுப் பரிசுகள் வழங்கினார்கள். கல்லூரியின் மாணவ மாணவியர்களுக்கு பல்வேறு உள்ளிடை விளையாட்டுப் போட்டிகளும், தடகளப் போட்டிகளும் நடத்தப்பட்டன. குழு விளையாட்டு (Games) பிரிவில் ஒட்டுமொத்தப் புள்ளிகளில் மூன்றாமாண்டு மாணவ, மாணவியர்கள் முதலிடம் பெற்றுள்ளனர். தடகளப் பிரிவில் ஒட்டுமொத்தப் புள்ளிகளில் இரண்டாமாண்டு மாணவ, மாணவியர்கள் முதலிடம் பெற்றுள்ளனர். தடகள ஆண்கள் தனிநபர் சாம்பியனாக இளங்கலை வணிகவியல் முதலாமாண்டு மாணவர் R. ராஜபாண்டி, தடகள பெண்கள் தனிநபர் சாம்பியனாக இளங்கலை வேதியியல் முதலாமாண்டு மாணவி S. ஸ்ரீ மகா ஆர்த்தி வெற்றிபெற்றுள்ளனர். உடற்கல்வி இயக்குநராக முனைவர் பா. அசோக்குமார் அவர்கள் செயல்பட்டு வருகிறார்.

## TAMIL NADU STATE PARTICIPATION 2024-2025



**L.PRAVEEN KUMAR**
I, B.A ECONOMICS
CRICKET



**I.PRATHICKSHA**
I, B.Sc COM.SCI
PENCAK SILAT

## 77th AGAC ATHLETIC MEET - 2025 ATHLETIC INDIVIDUAL CHAMPIONS



**S.SRI MAHA AARTHI**
I, B.Sc CHEMISTRY



**R.RAJA PANDI**
I, B.Com

## ALL INDIA LEVEL PARTICIPATION 2024-2025



**C.GANESH**
III, B.B.A
BALL BADMINTON



**P. NEETHI RANI**
II, M.A ENGLISH
CROSS COUNTRY



**G.HARSHINI**
III, B.Sc COM. SCI
BALL BADMINTON



**A.YOGESH**
III, B.Sc COM.SCI
BALL BADMINTON



**M.SAKTHI MEENA**
I, B.A TAMIL
KABADDI



**P.RAKSHANA**
I, M.A ENGLISH
ATHLETICS

## UNIVERSITY PARTICIPATION MEN 2024-2025



**S.HARIHARA PANDI**
III, BBA
CRICKET



**S.PRIYAKANTH**
III, B.Sc GEOLOGY
CRICKET



**A.YOKESH PRATHEEPH**
II, B.A ENGLISH
VOLLEY BALL



**S.SRIDHAR**
III, B.COM
FOOT BALL



**S.HARI HARAN**
III, BBA
HOCKEY



**M.SHANKAR**
III, B.COM
HOCKEY



**M.VISHNU PRAKASH**
I, B.A HISTORY
HOCKEY



**J.RAJ MUGILAN**
II, M.Sc PHYSICS
CHESS



**S.RADHA KRISHNAN**
II, B.COM
CHESS



**R.HARI HARAN**
II, B.Sc CHEMISTRY
CHESS



**V.SELVIN JOSE**
II, M.A ENGLISH
TABLE TENNIS



**S.AHAMED YASIN**
III, B.COM
BADMINTON



**G.MATHESWARAN**
III, B.COM
BADMINTON



**A. SHEIK MUFIN**
III, BCA
BADMINTON



**S.SAKTHI**
II, M.Sc CHEMISTRY
KHO-KHO



**M.DHARSHAN**
I, B.Sc GEOLOGY
TENNIS

## UNIVERSITY PARTICIPATION WOMEN 2024-2025



**R. JAISHREE GOMATHI**
I, BBA
CRICKET



**M. VINOTHA**
III, B.COM
CRICKET



**J.JUSTY**
III, B.COM
CRICKET



**J.ANJALI**
I, B.COM
CRICKET



**A.MADHARASI**
II, B.A TAMIL
VOLLEY BALL



**N.MADHUMITHA**
III, B.A TAMIL
FOOT BALL



**K.HARINI**
III, B.A TAMIL
FOOT BALL



**K.MANIMEKALAI**
II, B.Sc BOTANY
HOCKEY



**M.MUTHU PRIYA**
II, B.Sc ZOOLOGY
HOCKEY



**A.ISHWARYA**
III, BCA
HAND BALL



**V.PAVITHRA**
II, M.A TAMIL
CHESS



**P.SRIMATHI**
III B.Sc GEOLOGY
TABLE TENNIES



**P.PRIYA HARSHINI**
III, BCA
TABLE TENNIES



**K.MANIMEGALAI**
III, B.A ENGLISH
KHO-KHO



**M.SAKTHI MEENA**
I, B.A TAMIL
KABADDI



**S.THENMOZHI**
III, B.COM
HAND BALL



**R.DIVYA SOUNDHARYA**
II, B.A TAMIL
HAND BALL




Sivagangai District Cricket Association Leaque Winners

## ALAGAPPA UNIVERSITY INTER-COLLEGIATE TOURNAMENT 2024-2025 WINNERS


TABLE TENNIS (W) WINNERS



BADMINTON (M) WINNERS



CHESS (W) WINNERS



CHESS (M) RUNNERS



CRICKET (W) RUNNERS



HANDBALL (W) RUNNERS



CROSS COUNTRY (W) RUNNERS

அழகப்பா அரசு கலைக் கல்லூரியின் பொது நூலகத்தின் வாயிலாக 2024-2025 ஆம் கல்வி ஆண்டிற்காக ரூ.3,80,000.00 மதிப்புத் தொகையில் 1061 புத்தகங்கள் மற்றும் 3 பருவ இதழ்கள் வாங்கப்பெற்று அவை இக்கல்லூரியிலுள்ள அனைத்துத் துறைசார்ந்த நூலகங்களுக்கும் பிரித்து வழங்கப்பட்டுள்ளன. மேலும் மாணவர்கள் தங்கள் துறை சார்ந்த புதுத் தகவல்களைத் தெரிந்துகொள்வதற்கு ஏதுவாக N-List என்ற இணையவழி பருவ இதழ்களுக்கான 2024 - 2025ம் ஆண்டிற்கான சந்தாத் தொகை ரூ.5,900.00 (ஐயாயிரத்துத் தொள்ளாயிரம் மட்டும்) செலுத்திப் புதுப்பிக்கப்பட்டுள்ளது. மாணாக்கர்கள் போட்டித் தேர்வுகளுக்குத் தங்களைத் தயார்படுத்தும் பொருட்டு நாளிதழ், பருவ இதழ்கள் படிப்பதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளது. நூலகத்தைக் கணினிமயமாக்கும் பொருட்டு புதிதாக நூலக மென்பொருள் பொருத்தப்பட்டு அதுசார்ந்த பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் ஆசிரியர்கள் மற்றும் மாணாக்கர்களின் கற்றல் மேம்பாட்டிற்காக இணைய வழி பயன்பாட்டிற்கான வசதி செய்யப்பட்டுள்ளது.

## கல்வி



**அ. வினோத்**
தொழில் நிர்வாகவியல் துறை
முதலாம் ஆண்டு

அள்ள அள்ள குறையாத
அட்சய பாத்திரம் தான் கல்வி!
அறிவு எனும் பெட்டகத்தை
திறக்க உதவும் ஒரே சாவி தான் கல்வி!
அறியாமையை அகற்றி
அறிவைக் காட்டும்
அற்புத விளக்கு தான் கல்வி!
நாட்டின் மிகப்பெரிய அரணே கல்வி!
ஏடுகள் பல புரட்டியதால்
வாழ்க்கையில்
ஏற்றம் தந்திடும் கல்வி!
கல்வி கற்பது தவம்!
அதை கற்பிப்பது வரம்!
யார் கைவிட்டாலும் கற்ற
கல்வி கைவிடாது உனை!!





**A. Lathika**
B.Com - I - A

உழவனிடம் கற்பது
வேளாண் கல்வி!
பெற்றோரிடம் கற்பது
வாழ்க்கைக் கல்வி!
தோல்விகள் தருவது
அனுபவக் கல்வி!
வெற்றிகள் தருவது
தன்னம்பிக்கைக் கல்வி!
வான்மழை தருவது
இயற்கைக் கல்வி!
மூடநம்பிக்கை களைவது
பகுத்தறிவுக் கல்வி!







**ம. நந்தினி**
வணிகவியல் துறை
இரண்டாம் ஆண்டு

மாதா, பிதா, குரு ஆகிய
உறவுகள் தெய்வத்திற்குச் சமம்
இப்பொக்கிஷ உறவுகளை மதிக்க
கற்றுக்கொள்பவர்களுக்கு இவ்வுலகில்
அனைத்தும் வெற்றி தான்.

**வாழ்க்கை சிறப்பாக அமையும்.**

**M. ABIRAMI**
BBA - Ist Year,
I Shift



# தேசிய மாணவர் படை (NCC)

அழகப்பா கல்லூரியில் தேசிய மாணவர் படை மாணவர்கள் 2024 - 2025 ஆம் கல்வி ஆண்டில் பல்வேறு தேசிய மாணவர் படை முகாம்களில் கலந்து கொண்டுள்ளனர். 26.01.2025 அன்று டெல்லியில் நடைபெற்ற குடியரசு தின விழா அணிவகுப்பில் S. ஜீவகப்பிரியா என்ற வரலாற்றுத் துறை மூன்றாம் ஆண்டு மாணவி கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார். மேலும் 26.01.2025 அன்று சென்னை மெரினாவில் நடைபெற்ற குடியரசு தின விழா அணிவகுப்பில் K. நிர்மலா தேவி என்ற வணிகவியல் மூன்றாம் ஆண்டு மாணவி கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார். திண்டுக்கல், கும்பகோணம் மற்றும் தாம்பரம் ஆகிய இடங்களில் நடைபெற்ற தால் சைனிக் (TLC) முகாமில் K. ஹரிணி என்ற தமிழ்த்துறை மூன்றாம் ஆண்டு மாணவி கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார். அதேபோல் திண்டுக்கல் மற்றும் கும்பகோணத்தில் நடைபெற்ற தால் சைனிக் (TLC) முகாமில் P. நாகலட்சுமி என்ற வணிகவியல் இரண்டாம் ஆண்டு மாணவி கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார். மேலும் திண்டுக்கலில் நடைபெற்ற சைனிக் (TLC) முகாமில் மூன்றாம் ஆண்டு மாணவ மாணவிகளான S. ஜீவகப்பிரியா, C. ஸ்வர்ணஶ்ரீ, S. கார்த்திகேயன் மற்றும் இரண்டாம் ஆண்டு மாணவ மாணவியரான M. ஹரிஹரசுதன், R. முத்து விக்னேஷ், M. கேசவன், T. வசந்தபாரதி மற்றும் S. விஷ்ணு ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளனர். T. வசந்த பாரதி என்ற இரண்டாம் ஆண்டு வரலாற்று துறை மாணவர் மற்றும் R. முத்து விக்னேஷ் என்ற இரண்டாம் ஆண்டு இயற்பியல் துறை மாணவர் ஆகியோர் RDC (Republic Day Camp) முகாமில் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளனர். அதேபோல் ஏக் பாரத் ஸ்வஸ்த் பாரத் (EBSB) முகாமில் B. சோலை அழகு, D. முத்துக்குமார் S. கார்த்திகேயன், M. நித்யஶ்ரீ மற்றும் A. ஐஸ்வர்யா என்ற மூன்றாம் ஆண்டு மாணவ மாணவிகளும் R. முத்து விக்னேஷ் மற்றும் S. விஷ்ணு என்ற இரண்டாம் ஆண்டு மாணவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளனர். மேலும் S. சுமன் சுதர்சன் என்ற மூன்றாம் ஆண்டு பொருளாதார துறை மாணவர் சத்தியமங்கலத்தில் நடைபெற்ற BLC (Basic Leadership Camp) முகாம் மற்றும் மங்களூரில் நடைபெற்ற ALC முகாமிலும் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார். அதேபோல் குன்னூரில் நடைபெற்ற AAC (Army Attachment Camp) முகாமில் M. தீபதர்ஷினி, S. முத்துமணி என்ற இரண்டாம் ஆண்டு மாணவிகள் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார்கள். தேசிய மாணவர் படை அலுவலராக வரலாற்றுத் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் சரவணன் செயல்பட்டு வருகின்றார்.




அன்பு கொண்ட நீங்கள்...!!
அருகில் இருந்தால் என்ன...!!
தொலைவில் இருந்தால் என்ன...!!
தொலையாத உங்கள் நினைவுகள்...!!
என்னுள் இருக்கும் வரையில்...!!
தொலைவு கூட சுகமே...!!
என் அழுகையின்...!!
பின்னால் ஆயிரம்...!!
பேர் இருக்கலாம்...!!
ஆனால் என்...!!
சிரிப்பின் பின்னால்...!!
நிச்சயம் என்...!!
நண்பனே...!!
இருப்பான்...!!



**P. Kalaiselvi**
B.Com - I - A



கடைசி பக்கத்தில் தொடங்கி
முதல் பக்கத்தில் முடிக்க
நினைக்கிறாள்...
முடிந்தும் முடியாத ஒரு கதையை

வலி நிறைந்த என் வாழ்வில்
வளி போன்று வந்து எனக்கான
வழியைத் கூறிச் சென்ற
என் ஒளி அவள் (ன்)..... (தோழி (அ) தோழன்)

பிறர் கூடுகளைப்
பார்த்து ஏங்கும்
பறவைக்குத் தெரியவில்லை
தனக்கான கூடு தனிமையில்
வாடுகிறது என்று...

**ரா. கார்த்திகா**
B.Sc (C.S) - I



**Y. Giftson Jeniel**
**B.Com**



21.6.2024 அன்று நாட்டு நலப்பணித்திட்டம் சார்பில் சர்வதேச யோகா தினம் கொண்டாடப்பட்டது. 26.06.2024 அன்று சர்வதேச போதை ஒழிப்பு தினத்தை முன்னிட்டு, போதை ஒழிப்பு விழிப்புணர்வு ஊர்வலம் நடைபெற்றது. 24.9.2024 அன்று நாட்டு நலப்பணி திட்டக்குழு மற்றும் மாவட்ட சட்ட பணிகள் ஆணைக் குழுவும் இணைந்து சட்ட விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.

26.09.2024 மற்றும் 27.09.2024 (SWACHCHATAHISEVA) அன்று தூய்மை இந்தியா் குறித்த உறுதிமொழி எடுக்கப்பட்டது. நாட்டு நலப்பணி திட்ட மாணவர்கள் MY BHARAT என்ற பதாகையை கையில் ஏந்தி சீருடை அணிந்து, தூய்மையை குறித்த உறுதிமொழியை எடுத்தனர்.

சிவகங்கை மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு அலகு மற்றும் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்துடன் இணைந்து விழிப்புணர்வு மனித சங்கிலித் தொடர் நடைபெற்றது. 27.02.2024 அன்று நாட்டு நலப்பணித் திட்டத்தின் சார்பில் இரத்த தான முகாம் நடைபெற்றது. 28.01.2025 முதல் 03.02.2025 வரை ஏழு நாட்கள் கல்லூரி முதல்வர் முனைவர் அ. பெத்தாலெட்சுமி அவர்கள் வழிகாட்டுதலிலும், பல்கலைக்கழக ஒருங்கிணைப்பாளர் முனைவர் பா. சீனிவாசன் அவர்கள் அறிவுறுத்தலின் படியும், இலுப்பக்குடியில் நாட்டு நலப்பணி திட்ட சிறப்பு முகாம் நடைபெற்றது. இதில் மாணவர்கள் கோட்டை முனீஸ்வரா் கோயில், தண்ணீர் பந்தல் ஊரணி, அரசு உயர்நிலைப்பள்ளி மற்றும் சமுதாயக் கூடம், சுற்றியுள்ள இடங்களில் தூய்மைப் பணி மேற்கொண்டனர். 20.03.2024 நாட்டு நலப்பணி திட்டக்குழு யூத் ரெட்கிராஸ், டாக்டர். அழகப்பா சைன்சிட்டி லயன்ஸ் சங்கம் மற்றும் செங்கொடை பவுண்டேஷன் இணைந்து இரத்த தான முகாம் நடைபெற்றது.

## பாட்டல் குமரேசன்

G. கைலாசம்
புவி அமைப்பியல் துறை



கிழக்குப்பட்டினு ஒரு செழிப்பான கிராமத்துல குமரேசன் குடும்பத்துல மட்டும் வறுமை செழிப்பாக இருந்தது. இந்த குமரேசனுக்கு ரெண்டு பழக்கம் உள்ளது. ஒன்று இரவு பகலும் பார்க்காமல் வேலை செய்வார். மற்றொன்று பகலும் இரவும் பார்க்காமல் குடிப்பார்.

இந்த குமரேசனுக்கு அழகான மனைவி லெட்சுமியும் அறிவான மகன் சேதுவும் வறுமையான வாழ்க்கையில் வாழ்ந்தனர். தனது அம்மாவிற்கு உடுத்த ஒழுங்கான ஆடை இல்லாததையெண்ணி வருத்தப்படுவான். இந்த சேதுக்கு ஒரு பெரிய கனவு உண்டு. தாம் ஒரு பெரிய ஓவியக் கலைஞன் ஆகவேண்டும் என்று. அவன் வீட்டின் சுவர்களில் பெரும் தலைவர்களான பெரியார், அம்பேத்கார் போன்ற ஓவியங்களை வரைந்திருக்கும்

காலையில் சூரியன் உதித்ததும் கூலி வேலைக்கு சென்று விடுவாள் லெட்சுமி. அன்று ஒருநாள் குமரேசன் தனது மகனை பள்ளிக்கு அழைத்து செல்லும் நேரத்தில் சேது வீட்டின் ஓரத்தில் முடிச்சிப்பட்டிருந்த மூட்டையை அப்பா முன்பு வைத்து அப்பா நீங்க குடிச்சிட்டுப் போட்ட சரக்கு பாட்ல சேகரிச்சு வச்சசுப்பா.இதை எடைக்கு போட்டு அம்மாவிற்கு ஒரு நல்ல சேலை வாங்கிகுடுங்கள் என்று கூறினான். மகனுக்கும் மனைவிக்கும் என்ன தேவை என்று தெரியாமல் குடியில் மூழ்கிவிட்டோமே என்று குற்ற உணர்ச்சி குமரேசன் மனதில் எழுந்தது. இந்த சிறுவனின் சிறிய செயல் அவனுடைய அப்பாவையும் வாழ்க்கையையும் மாற்றியது.







ச. மாலினி
இளங்கலைத் தமிழ்
மூன்றாம் ஆண்டு

அழகப்பா அரசு கலைக்கல்லூரியில் மாணவர்களின் நுண்கலைத் திறன்களை வளர்த்தெடுக்கும் வகையில் நுண்கலை மன்றம் செயல்பட்டு வருகின்றது. அம்மன்றத்தின் ஒருங்கிணைப்பாளராகத் தமிழ் உயராய்வு மையத்தின் இணைப்பேராசிரியர் முனைவர் ப.சு. செல்வமீனா, உறுப்பினர்களாக ஆங்கிலத்துறை உதவிப்பேராசிரியர் திருமதி சு. ஷர்மிளா, வணிகவியல் துறை இணைப்பேராசிரியர் மு. லெட்சுமணக்குமார் போன்றோர் இருந்து வருகின்றனர்.

சிவகங்கை மாவட்டத் தமிழ் வளர்ச்சித்துறை 07.08.2024 அன்று நடத்திய அம்பேத்கார் பிறந்தநாள் விழாப் பேச்சுப்போட்டியில் நம் கல்லூரியின் கணினிப் பயன்பாட்டியல் துறை மூன்றாமாண்டு மாணவி கு. ஆர்த்தி மூன்றாமிடத்தையும் ரூ.2,000/- பணப்பரிசையும் 08.08.2024 அன்று நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் குறித்த பேச்சுப் போட்டியில் தமிழ்த்துறை இரண்டாமாண்டு மாணவி அ. மாதரசி இரண்டாமிடத்தையும் ரூ.3,000/- பணப்பரிசினையும் பெற்றனர்.

சிவகங்கை JCI 16.08.2024 அன்று நடத்திய சவால் -2024 என்னும் நிகழ்வில் நடைபெற்ற கவிதைப்போட்டியில் இளம்வணிகவியல் இரண்டாமாண்டு மாணவி சந்தியா ஸ்ரீநிதி முதலிடமும் குழுநடனத்தில் வணிகவியல் துறை சங்கீதா புவியமைப்பியல் துறையைச் சார்ந்த கௌசல்யா, அனுசுயா ஆகியோர் மூன்றாமிடமும் பெற்றனர். பேச்சுப்போட்டியில் கணினிப்பயன்பாட்டியல் துறை மூன்றாமாண்டு மாணவி கு. ஆர்த்தி மூன்றாமிடமும் சவால்களை எதிர் கொள்வது எப்படி? என்னும் போட்டியில் இளம் வணிகவியல் இரண்டாமாண்டு மாணவிகள் நர்கீஸ்பானு, சுருதிஸ்ரீ முதல் பரிசும் பெற்றனர்.

Rotary Club of Karaikudi 16.08.2024 நடத்திய Karmela-2024 இல் முக அலங்காரப் போட்டியில் இளம் புவியமைப்பியல் துறையைச் சேர்ந்த Lakshmi, Diyadharshini இரண்டாம் இடத்தையும் மௌன நாடகத்தில் இளம் வணிகவியல் இரண்டாமாண்டு மாணவிகள் சுருதிஸ்ரீ, சார்மதி, பிரின்சிமிஸ்டிகா, கன்னிகா, நீதிராணி, மாதரசி குழுவினர் மூன்றாமிடத்தையும் பெற்றனர்.

07.10.2024 அன்று சிவகங்கை அரசு மகளிர் கலைக்கல்லூரியில் நடத்தப்பெற்ற மாவட்ட அளவிலான கையெழுத்துப் போட்டியில் முதுகலைத் தமிழ் இரண்டாமாண்டு மாணவி வே. பவித்ரா மூன்றாமிடம் பெற்று ரூ.3,000/- பணப்பரிசைப் பெற்றார்.

13.12.2024 அன்று நேரு யுவகேந்திரா நடத்தி Utsav 2024 நிகழ்வில் பாட்டுப்போட்டியில் இளங்கலை ஆங்கிலத்துறை இரண்டாமாண்டு மாணவி விஜி முதல் பரிசையும் குழுப்பாடலில் விஜி அன்னபூரணி இரண்டாம் பரிசையும் பேச்சுப் போட்டியில் இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு மாணவி மாதரசி மூன்றாம் பரிசையும் குழுநடனத்தில் கற்பகம் பொன்னழகு பிரியதர்சினி, தனலெட்சுமி, கீர்த்திகா, அபர்ணா, அபிநயா, தனலெட்சுமி குழுவினர் முதல் பரிசையும் பெற்றனர்.

தேவகோட்டை ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரியில் நிறுவனர் நாள்விழாப் போட்டிகள் நடைபெற்றன. கவிதைப் போட்டியில் இயற்பியல் துறை இரண்டாமாண்டு மாணவி பைரவ ரூபினி முதல் பரிசையும், சிறுகதை எழுதும் போட்டியில் ஆங்கிலத் துறை இரண்டாமாண்டு மாணவி அன்னபூரணி முதல் பரிசையும், பேச்சுப்போட்டியில் புவியமைப்பியல் துறை இரண்டாமாண்டு மாணவி வை. அபிநயா மூன்றாம் பரிசையும் பெற்றதோடு புள்ளிகள் அடிப்படையில் ஒட்டுமொத்த சேம்பியன் பட்டத்தையும் சுழற்கோப்பையையும் வென்றனர்.

18.12.2024 சிவகங்கை அரசு மகளிர் கல்லூரியில் அய்யன் திருவள்ளுவர் வெள்ளிவிழாப் போட்டிகள் நடைபெற்றன. மீக்குறும்படம் தயாரிக்கும் போட்டியில் தாவரவியல் துறை மூன்றாமாண்டு மாணவிகள் மாலதியாழினி புவனேஸ்வரி சரண்யா ஆகியோர் அடங்கிய குழு இரண்டாமிடம் பெற்று சென்னையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி செழியன் அவர்களிடமிருந்து ரூ. 2500 பணப்பரிசினையும் பெற்றனர்.

24.01.2025 அன்று சிவகங்கை மாவட்டத் தமிழ் வளர்ச்சித் துறை நடத்திய மாவட்ட அளவிலான கட்டுரைப் போட்டியில் முதுகலைத் தமிழ் இரண்டாமாண்டு மாணவி வே. பவித்ரா முதலிடம் பெற்று ரூ.10,000/- பணப் பரிசினைப் பெற்றார். இப்பரிசினை சிவகங்கை மாவட்ட ஆட்சியர் வழங்கினார். இதனை தொடர்ந்து 28.01.2025 அன்று

சென்னையில் நடைபெற்ற மாநில அளவிலான கட்டுரைப் போட்டியில் மூன்றாம் இடம் பெற்று ரூ.10,000/- பணப்பரிசினைத் தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் முனைவர் ஔவை ந. அருள் அவர்களிடம் இருந்து பெற்றார்.

மாநிலச் சிறுபான்மையினர் ஆணையம் 25.02.2025 அன்று அழகப்பா பல்கலைக்கழகத்தில் நடத்திய ஆங்கிலப் பேச்சுப்போட்டியில் வணிகவியல் துறை இரண்டாமாண்டு மாணவி சார்மதி முதலிடத்தையும், தமிழ்ப் பேச்சுப் போட்டியில் இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு மாணவி மாதரசி புவியமைப்பியல் துறை இரண்டாமாண்டு மாணவி அபிநயா கணினிப்பயன்பாட்டியல் துறை மூன்றாம் ஆண்டு மாணவி ஆர்த்தி ஆகியோர் சிறப்புப் பணப்பரிசுகளையும் பெற்றனர்.

நுண்கலை மன்ற ஆண்டு விழாவினை முன்னிட்டு 17, 18, 20.03.2025 ஆகிய மூன்று நாட்கள் பன்னிரண்டு போட்டிகள் நடத்தப்பட்டன. இவற்றில் நமது கல்லூரியின் பல்வேறு துறை மாணவ மாணவிகள் பங்கேற்று தங்கள் திறமைகளை வெளிப்படுத்தினர்.

18.03.2025 அன்று காரைக்குடி கம்பன் கழகம் நடத்தியப் பேச்சுப்போட்டியில் இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு மாணவி மாதரசி இரண்டாம் இடத்தைப் பெற்றார். 26.03.2025 சிவகங்கை மாவட்டத் தமிழ் வளர்ச்சித் துறை நடத்திய திருக்குறள் வினாடி வினாப் போட்டியில் இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு மாணவி மாதரசி முதலிடம் பெற்றதோடு 27.03.2025 அன்று சென்னை உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தில் நடைபெற்ற மாநில அளவிலான வினாடி வினாப் போட்டியில் முதலிடம் பெற்று ரூ.1500/- பணப்பரிசினை தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் முனைவர் ந. அருள் அவர்களிடம் இருந்து பெற்றுக் கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

அழகப்பா அரசு கலைக்கல்லூரி மாணவர்களின் தனித்திறன்களை வளர்த்தெடுத்தல் என்னும் உயரிய நோக்கத்தோடு தோற்றுவிக்கப்பட்ட நுண்கலை மன்றம் தனது பணியைச் செவ்வனே செய்து வருகின்றது. 2024-2025 ஆம் கல்வியாண்டில் 04.04.2025 நுண்கலை மன்ற ஆண்டு விழாவில் அழகப்பா பல்கலைக்கழகத் தேர்வாணையர் முனைவர் மு. ஜோதிபாசு அவர்கள் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று விழாவைச் சிறப்பித்து பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகளை வழங்கினார்.






ரா. பிரதீபன்
தொழில் நிர்வாகவியல் துறை
முதலாம் ஆண்டு – முதல் சுழற்சி



மனிதனே விழித்துக்கொள்!!!
உன்னுடைய அறிவை
வேறொரு ஆயுதம்
உறிஞ்சிக்கொண்டிருக்கிறது...



**V. Nathiya**
BBA I Year
I Shift



மனிதர்கள் பிறப்பதற்கு
முன் கருவறையில்
இருக்கிறார்கள்...

பிறந்த பின் மொபைலில்
இருக்கிறார்கள்...

நமது கல்லூரியின் வேலைவாய்ப்பு மையம் சார்பாகவும் சிவகங்கை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையமும் இணைந்து, இங்கு பயிலும் மாணவ மாணவியருக்கு TNPSC போட்டி தேர்வுகளுக்கான இலவச பயிற்சி வகுப்புகள் 01.09.2024 முதல் 14.02.2025 வரை நடைபெற்றது.

நமது கல்லூரியில் 07.01.2025 அன்று வேலைவாய்ப்பு மையம் சார்பாக இந்திய விமானப்படையில் Group IV பிரிவில் மருத்துவ உதவியாளர் மற்றும் அக்னிவீர் பணிகளுக்கான (Agniveer) விழிப்புணர்வு நிகழ்ச்சி மூன்றாம் ஆண்டு இளநிலை அறிவியல் மாணவர்களுக்கு நடத்தப்பட்டது. இதில் இந்திய விமானப்படையின் தாம்பரம் பிரிவில் இருந்து மேஜர் மனோஜ் கலந்துக் கொண்டு உரையாற்றினார்.

தமிழ்நாடு அரசின் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை மற்றும் சிவகங்கை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மையம் நடத்தும் கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் 30.01.2025 அன்று நம் கல்லூரியில் சார் ஆட்சியர் உயர்திரு. ஆயுஷ் வெங்கடேஷ் வத்ஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. புத்தக கண்காட்சியில் சுமார் 300 புத்தகங்கள் மாணவர் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தன.

13.02.2025 அன்று நம் கல்லூரியில் பட்டம் பெற்ற மாணவர்களுக்கு Equitax Micro Finance Bank (ஈக்குடோஸ்) மைக்ரோ பைனான்ஸ் வங்கியிலிருந்து Relationship Manager மக்கள் உறவு மேலாளர் பதவிக்கான நேர்காணல் நடைபெற்றது. இதில் அனைத்துத் துறை மாணவர்கள் 100 பேர் கலந்து கொண்டனர்.

**Time is very slow**
**for those who wait**

**Very fast for those**
**who are scared**

**very long for those**
**who lament**

**very short for those**
**who celebrate**

**But for those who love**
**time is eternal**






**A. Charumathi**
B.Com - I - A

## *Intersting History of 1752*




***The Year with missing 11 Days***

*In September 1752, people in Britain and its American Colonies went to sleep on September 2 and woke up on September 14.*

*What happened to the missing days? Before 1752, Britian followed the Julian calender, but it was 11 days behind most of Europe. To fix this Britain switched to the Gregorian calender skipping those 11 days.*

*Some People thought they had lost past of their lives and there were rumors of Protest shouting, "Give us our 11 days back!" But it in reality life quickly returned to normal.*



**V. Shanmugapriya**
B.Com

# Fighter



**Shri Harini S.M.**
BBA I Year
I Shift

Once there was born a fighter,
without knowing about fights.

Her body and soul was lighter,
Wanted to fly heights.

What sin has she caused?
She needed to be safer,

Her dreams were paused,
There she's crushed like paper.



Oh! she needed justice,
why? asks the headchief

As she was just a woman,
It wasn't given

Once there was born a fighter,
Who Passed away without knouring to fight.

1. சிவகங்கை மாவட்டக் குருதிக்கொடையாளர்கள் அமைப்பு காரைக்குடி நியூஸ், சிவகங்கை லயன்ஸ் கிளப், அழகப்பா அரசு கலைக்கல்லூரி யூத் ரெட் கிராஸ் மற்றும் நாட்டு நலப்பணித் திட்டம் ஒருங்கிணைப்பாளர்களுடன் மாவட்ட ரத்த வங்கியும் இணைந்து 4.10.2024 அன்று அழகப்பா அரசு கலைக்கல்லூரி முதல்வர் முனைவர் அ. பெத்தாலெட்சுமி அவர்கள் தலைமையில் விழிப்புணர்வு மற்றும் மாபெரும் ரத்த தான முகாம் உமையாள் கலை அரங்கில் நடத்தப்பட்டது. 50க்கும் மேற்பட்டோர் ரத்த தானம் செய்தனர்.

2. Indian Red Cross Society, lions Club of Alagappar Science City, Sengodai Foundation, Alagappa Govt. Arts College Youth Red Cross இணைந்து 20.03.2025 அன்று உமையாள் கலையரங்கில் முதல்வர் அவர்களின் தலைமையில் ரத்ததான முகாம் நடத்தப்பட்டது. இதில் ஆசிரியர்கள் மாணவர்கள் என 50க்கும் மேற்பட்டோர் ரத்த தானம் செய்தனர்.

3. Alagappa Govt. Arts College அமைப்பின் சார்பாக ஒரு நாள் உரையரங்கம் 29.03.2025 அன்று அழகப்பா அரசு கலைக் கல்லூரி தமிழ் உயராய்வு மையத்தின் கருத்தரங்க கட்டிட அறையில் YRC ஒருங்கிணைப்பாளர் முனைவர் அ. பாரதிராணி அவர்களால் நடத்தப்பட்டது. இந்நிகழ்வு அழகப்பா அரசு கலைக்கல்லூரி முதல்வர் அவர்களின் தலைமையில் நடத்தப்பட்ட இந்நிகழ்வில் தமிழ்த்துறை தலைவர் முனைவர் மா சிதம்பரம் வாழ்த்துரை வழங்கினார். 'மாணவர்களின் சமூகப் பொறுப்பு' என்ற தலைப்பில் திரு மனோஜ் சமூக நல ஆர்வலர் மற்றும் மாநில நிர்வாக இயக்குநர் அவர்கள் மாணவர்களுக்கான சமூகப் பொறுப்பு என்ன என்பது குறித்தும், இளையோர்கள் எவ்வாறு வாழ வேண்டும், எத்தகைய தேடலுடன் தன்னை இந்த உலகத்திற்குத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற அடிப்படையிலும் சிறப்புரை ஆற்றினார்.

## புதிய பாதை



பெண்ணென பிறந்துவிட்டோம் என
வருந்தாதே,

பார்போற்றும் புகழ் உன்னைத்தேடி
வரும் கலங்காதே,

கண்மூடி உறங்காமல் உன்கனவுப்
பாதையைத் தொடரவே,



உன் எஞ்சிய வாழ்க்கையைக்
காரணங்களால் தொலைத்திடாதே

துணிந்து செல்; முன்னேறு உலகம்
உன் கை வசம் வரும் வரை,

விழி மூடாமல் ஓய்ந்து போகாமல்
சோர்ந்து தளராமல்

(துன்) நம்பிக்கையும் விடாமுயற்சியும்
உன் தோழிகளாக உடன்வைத்து எழுந்து

உன் வாழ்க்கையை மாற்றிப் புதிய
பாதை ஒன்றைக் கண்டெடு பெண்ணே!!!



**த. கீர்த்திகா**
தொழில் நிர்வாகவியல் துறை

## இலக்கு

**உனக்கான இலக்கை நிர்ணயம் செய்**
**அந்த இலக்கை நோக்கிப் பயணம் செய்**

**பயணத்தின் போது வேகம் கொள்**
**வேகத்தோடு விவேகமும் கொள்**

**தடைகள் வரலாம்! தாண்டிச் செல்!**
**பிழைகள் ஏற்படலாம்! திருத்திக்கொள்!!**

**தோல்விகள் காணலாம்! கற்றுக் கொள்!**
**கற்றுக் கொண்டதை நினைவில் கொள்!!**

**நினைவில் கொண்டதை பயிற்சி செய்!**
**பயிற்சியோடு முயற்சியும் செய்!**
**உனக்கான இலக்கை தொட்டுவிடலாம்!!**



**க. ராஜலெட்சுமி**
தொழில் நிர்வாகவியல் துறை

## அப்பா



கஞ்சன் ...
சிக்கனக்காரன்...
என பல பெயர்களைக் கொண்டவன்!!
பாசத்தைக் கொட்டுவதில் மட்டும்
பணக்காரன்!!
வாய் நிறைய பாராட்டியதில்லை
ஆனால் ஊராரிடம் என்
பிள்ளை என பெருமிதம்
கொள்வான்!! ஆம்
அந்த ஒற்றை வார்த்தைக்குச்
சொந்தக்காரன் ... **அப்பா**

உங்கள் தோள்கள்மீது சுமந்து கொள்வதைவிட...!!
சிறந்த உலகம் உண்டா என்று...!!
தெரியவில்லை எனக்கு...!!
கவிதைக்கு இலக்கணம் அம்மா என்றால்...!!
அந்த அழகான கவிதையே எனக்கு...!!
பரிசளித்த கவிஞரே நீங்கள்தான் **அப்பா**

**மரணத்தின் போதும்...!!!**
**உங்கள் மகளாக...!!!**
**இருக்க ஆசைப்படுகிறேன்...!!!**



**மீ. ஆப்ரின் பானு**
தொழில் நிர்வாகவியல் துறை

# மகளிர் மன்றம்

நம் கல்லூரியின் மகளிர் மன்ற விழா 08.03.2025 அன்று நடைபெற்றது. இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக முனைவர் B.S.S ஜெகன் வழக்கறிஞர் (சென்னை உயர்நீதிமன்றம்), Dr.D. தாமரை MBBS (அரசு மருத்துவர்) ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். மகளிர் மன்றம் சார்பாக மாணவிகளுக்குப் பல்வேறு போட்டிகள் நடத்தப்பெற்று வெற்றி பெற்ற மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

கல்லூரியின் மகளிர் மன்றமும் IQAC - யும் இணைந்து ஆசிரியர்கள் மற்றும் மாணவிகளுக்கு Add-on-course ஆக Beautician, Aari Work, Spoken English & Personality Development ஆகிய Certificate Course களை நடத்தி வருகிறது. இம் மகளிர் மன்ற விழாவில் பயிற்சி பெற்ற மாணவியருக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.



**N. Nadieshwari**
B.Com - I - B



**KR. Nivaedha**
B.Sc., (CS)
III Year - A Sec







**Manjula Devi**
B.Com - II - A

**உன் அறிவை**
**கைவிலங்கு போட்டு**
**கைது செய்கிறது**
**கைபேசி**



மு. ஆர்த்தி
BBA - I Year
I Shift

**S. Devi**
BBA - I





**அழகப்பா அரசு கலைக் கல்லூரி,** காரைக்குடி – 3.

| | | |
|---|---|---|
| மலர்க்குழு ஆசிரியர் | : | முனைவர் **அ. பெத்தாலெட்சுமி**<br>முதல்வர் |
| பதிப்பாசிரியர் | : | முனைவர் **க. அமுதா**<br>இணைப்பேராசிரியர் – தமிழ்த்துறை |
| உறுப்பினர்கள் | : | திருமதி **க. கவிதா**<br>உதவிப்பேராசிரியர் – இயற்பியல் துறை |
| | | முனைவர் **அ. பாலசுப்பிரமணியன்**<br>இணைப்பேராசிரியர் – கணிதத்துறை |
| | | முனைவர் **எம். கருணாகரன்**<br>இணைப்பேராசிரியர் – இயற்பியல் துறை |
| | | முனைவர் **மு. மரகதவல்லி**<br>இணைப்பேராசிரியர் – தமிழ்த்துறை |
| | | முனைவர் **க. சோமசுந்தரம்**<br>உதவிப்பேராசிரியர் – ஆங்கிலத்துறை |
| | | முனைவர் **கா. அர்ச்சுணன்**<br>இணைப்பேராசிரியர் – கணிதத்துறை |


| | | |
|---|---|---|
| 1.Place of Publication | : | **Alagappa Govt. Arts College Karaikudi - 630 003.** |
| 2.Periodicity of its Publication | : | **Annual** |
| 3.Language | : | **Tamil and English** |
| 4.For whom it is circulated | : | **Among the members of the staff and students of this college.** |
| 5.Printer's Name | : | **SLP Sri Lakshmi Printers** |
| Nationality | : | **Indian** |
| Address | | **# 2A, Subramaniyapuram, 1st Street, Karaikudi - 2.** |
| 6.Editor's Name | : | **Dr. K. Amudha** |
| Nationality | : | **Indian** |
| Address | : | **Associate Professor<br>Tamil Research Centre<br>Alagappa Govt Arts College.<br>Karaikudi - 3** |
| 7.Publisher's Name | : | **Dr. A. Pethalakshmi** |
| Nationality | : | **Indian** |
| Address | : | **Principal,<br>Alagappa Govt Arts College,<br>Karaikudi - 3** |

Certified that the above particulars are true to the best of my knowledge.- Editor

# 2024 - 2025 ஆம் கல்வியாண்டில் ஓய்வு பெறுபவர்கள்



முனைவர் **அ. பெத்தாலெட்சுமி** M.Sc., M.Phil., Ph.D.,
முதல்வர்



**திரு. சி.ரா. ராஜாமோகன்** M.A.,
நிதியாளர்
ஓய்வு பெறும் நாள் : 30.06.2025



முனைவர் **அ.பொ. தனபாலன்**
M.Sc.,B.Ed.,M.Phil.,Ph.D.,
இணைப்பேராசிரியர்,
கணிதவியல் துறை



முனைவர் **அ. அப்துல் ரஹீம்**
M.Com.,M.B.A.,M.Phil.,Ph.D.,
உதவிப் பேராசிரியர்,
வணிகவியல் துறை



தாவரவியல் துறை கருத்தரங்க நிகழ்வு




முதல்வர் தேசிய மாணவர் படை மாணவியர்களை பாராட்டும் நிகழ்வு



நுண்கலை மன்ற விழா



மன்ற விழா

## Release of ICMASS - 2025 International Conference Souvenir




## CM Trophy 2025 Cricket (Women) Winners




## CM Trophy 2025 Cricket (Men) Winners




## கல்லூரி சுதந்திர தின விழா கொண்டாட்ட நிகழ்வு



## முத்தமிழ் விழா நிகழ்வு



## கல்லூரி ஆண்டு விழா நிகழ்வு



## கல்லூரி நாட்டு நலப்பணித்திட்ட நிகழ்வு

